DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1463
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday April 19, 2024

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் ‘கருப்பொருளை’ நாசம் செய்யும் வகையில் செயற்படும் அதன் தேர்தல் அலுவலர்கள்...

# முன்னாள் அமைச்சரும் அமைப்பின் தீவிர செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தியின் வேட்பு மனு நிராகரிப்பு...

# கனடாவில் தோன்றியுள்ள ‘எழுச்சியை’ மழுங்கடிக்க ‘பதவி ஆசை’ கொண்டவர்கள் அரங்கேற்றும் ‘பழிவாங்கல்கள்’



நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் பலம் நிறைந்த அமைப்பு 2010ம் நிறுவப்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் வீழ்ச்சிக்குப் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்காகா குரல் கொடுக்கும் வகையில் தோற்றுவிக்கப்பெற்ற அற்புதமான ‘கருப்பொருளை’ தங்கள் கைகளில் எடுத்து செயற்படும் வகையில் உலகின் பல நாடுகளில் வாழும் பலரும் இயங்கிவருகின்றார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and Information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM




# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 24-வது ஆண்டு விழா (2024)

ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் – டொரொன்ரோ
3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8
E-Mail: sakthi1226@gmail.com | Tel: 416-293-1226 | Fax: 416-293-1215





கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைதா நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

**அம்பிகை அடியார்க்ளே**

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து நிகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவனம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் – நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை 29 ம் நாள் **(11.05.2024)** சனிக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் கொடியேற்றப்படும்.

**மே 25 ஆம் திகதி வைகாசி திங்கள் 12-ம் திகதி காலை 8:00 மணி தொடக்கம் 9:00 மணிக்குள் மூலத் நட்சத்திரம், மிதுன லக்னத்தில் தேர் வடம் பிடிக்கப்படும்.**

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலை**

8:30 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:30 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து
அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்கனம் : **ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்**

**மாலை**

5.00 மணிக்கு கும்ப பூஜை
5.30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6.00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8.00 மணிக்கு வெளிவீதி வீதி வலம் வருதல்
8.45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

**புதிய வேத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.**
**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.**

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் 'கருப்பொருளை' நாசம் செய்யும் வகையில் கனடாவில் 'பழிவாங்கல்கள்'

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் 'கருப்பொருள்' உயரிய நோக்கத்தோடு எதிர்காலத்தில் எமது தாயக மக்களின் நலன்களையும் உரிமைகளையும் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கபெற்ற ஒரு அற்புதநோக்கம் கொண்ட செயற்பாடு ஆகும்.எதிர்பாராத விதமாக உலகத்தின் பல நாடுகள் இணைந்து அரங்கேற்றிய இனப்படுகொலைகள் மற்றும் கொரூரமான தாக்குதல்கள் காரணமாக சிதைந்து போன எமது சுதந்திர வேட்கையை தீரத்துடன் நகர்த்திச் செல்லும் நோக்கோடு நிறுவப் பெற்றது இந்த அரசியல் அமைப்பு.

இந்த அமைப்பின் தோற்றத்திற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் எவருமே உரிமை கொண்டாட முடியாத அளவிற்கு அதன் ஆரம்ப கர்த்தாக்கள் அதனை நிறுவினார்கள். ஆனால், தெளிவான சிந்தனை எதுவுமின்றி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்டவர்கள் அவற்றை 'நாசம்' செய்யும் வகையில் செயற்படும் காட்சிகளை நாம் கடந்த சில நாட்களாக கனடாவில் பார்த்தும் கேட்டும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். இந்த அரிதான அமைப்பிற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அதன் செயற்பாடுகளை நகர்த்திச் செல்லும் வகையில் எதிர்வரும் மே மாதம் 5ம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முன்னாள் அமைச்சரும் அமைப்பின் தீவிர செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்திவேட் சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த 'பழிவாங்கல்' நடவடிக்கையில்ஈடுபட்டுள்ளவர்களில் கனடாவில் முன்னர் ஆட்கடத்தல் களவுகளில் ஈடுபட்டுள்ள ஒருவரும் இணைந்துள்ளார் என அறியப்படுகின்றது. இவரையும் உள்கிய ஒரு குழுவில் நால்வர் அடங்குகின்றார்கள் எனவும் இந்த குழு இன்னொரு பெயரில் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பை நிறுவி நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள் எனவும் அறியப்படுகின்றது.

தற்போது கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தோன்றியுள்ள 'எழுச்சியை' மழுங்கடிக்க 'பதவி ஆசை' கொண்டவர்கள் அரங்கேற்றும் 'பழிவாங்கல்கள் என்றே நாம் இந்த அநியாயமான நடவடிக்கைகளை பார்க்க வேண்டியிருக்கின்றது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் பலம் நிறைந்த அமைப்பு 2010ம் நிறுவப்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் வீழ்ச்சிக்குப் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்காகா குரல் கொடுக்கும் வகையில் தோற்றுவிக்கப்பெற்ற அற்புதமான 'கருப்பொருளை' தங்கள் கைகளில் எடுத்து செயற்படும் வகையில் உலகின் பல நாடுகளில் வாழும் பலரும் இயங்கிவருகின்றார்கள்.
இவவாறான அமைப்பை அதன் செயற்பாடுகளையும் தடுக்கும் நோக்கோடு இடம் பெறும் 'பழிவாங்கல்களை' நிறுத்தும் வண்ணம் 'கனடா உதயன்' வேண்டிக்கொள்கிறது. கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட முக்கிய உறுப்பினர்களை செயற்படத் தடுப்பது தவறான செயல் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.!

**மிசிசாகா நகரில் வீட்டைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு மணித்தியாலத்திற்கு $25 சம்பளமாகப் பெறலாம்**

மிசிசாகாவில் நகரில் (**QEW** க்கு தெற்கே), வாரத்தில் இரண்டு முதல் மூன்று நாட்கள் வரை, தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு இலங்கை சமையல் மற்றும் சுத்தம் செய்வதில் அனுபவமுள்ள ஒரு பெண் தேவைப்படுகின்றார்.
ஒரு நாளைக்கு 4 மணிநேரம் வேலை செய்யலாம்
மேலதிக விபரங்களுக்கு நிர்மலா
(647) 391-4207

**House For Rent**

**McLevin / Tapscott**
சந்திப்பிற்கருகாமையில்
**3 Bedroom + Den** கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
2 வாகனங்கள் தரிக்கலாம். வர்த்தக நிலையங்கள், **Bus** வசதி, **Nofrills** ஆகியன மிக அருகில்.
**Malvern Mall** அருகில் உள்ளது.
விபரங்களுக்கு:
**416-912-1572 416-299-4904**

## ஸ்காபுறோ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள நூல்களின் சங்கமம்' புத்தகங்களின் கண்காட்சி. கண்டு களிக்க அனைவரும் வாருங்கள்!

ரொறன்ரோவில் முதன் முதலாக நடைபெற இருக்கும் இதுபோன்ற புத்தகக் கண்காட்சியில் கனடா எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், மஞ்சரிகள் என்று பல விதமான இலக்கிய ஆக்கங்களும் இடம் பெற இருக்கின்றன. இதைவிட சிறுவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்குமான நூல்களும், பயிற்சி மலர்களும் இந்தக் கண்காட்சியில் இடம் பெறுகின்றன.
செல்போனுடன் மட்டுமே நேரத்தைச் செலவிடும் பிள்ளைகளுக்கு இவற்றை வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம். அவர்கள் வேண்டாம் என்று சொன்னாலும் வங்கிச் சென்று அவர்கள் கண்ணில் படும்படியாக அவற்றை வையுங்கள். சந்தர்ப்பத்தைப் பெற்றோர்களாகிய நீங்களே ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவர்களாகவே ஒருநாள் இந்தப் புத்தகங்களைத் தாங்களாகவே எடுத்துப் பார்ப்பார்கள். பொது அறிவை விருத்தி செய்யவும், எமது வரலாற்றைப் புரிந்து கொள்ளவும், எங்கள் மொழி இந்த மண்ணில் நிலைத்து நிற்கவும் இது போன்ற நூல்கள் இளைய தலைமுறையினருக்குப் பெரிதும் உதவியாக அமையும்.

மேலும் இந்த நிகழ்வின் போது சில எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிடவும், அறிமுகம் செய்யவும் இருக்கிறார்கள். அந்த நிகழ்வுகளிலும் நீங்கள் கலந்து கொள்ளலாம். சுமார் 34 இளைய தலைமுறையினர் பங்குபற்றும் பட்டிமன்றம், நடனம், உரைகள், திருக்குறள் சார்ந்த உரைகள் போன்ற நிகழ்வுகளையும் நீங்கள் கண்டு களிக்கலாம். உங்கள் அபிமான எழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் போன்றவர்களையும் இந்த நிகழ்வில் நேரடியாகச் சந்தித்து உரையாட, இந்த நிகழ்வு உங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க இருக்கின்றது.
எனவே சிறுவர்களையும், இளைய தலைமுறையினரையும் ஆசிரியரிகளும், பெற்றோர்களுமாகிய நீங்கள் இந்த நிகழ்விற்கு அழைத்து வந்து அவர்களும் கனடியத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிந்து கொள்ள வழிவகை செய்வது, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு நன்மை தருவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் இலக்கிய ஆர்வலர்களையும் இந்தப் படைப்பிலக்கியக் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.
(மேலதிக விபரங்களுக்கு பின் பக்கத்தைப் பார்க்கவும்)

**TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY**

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



**House for SALE in Colombo**

**கொழும்பில் வீடு விற்பனைக்கு உண்டு**

**14 Arethusa lane, Colombo 06, Sri Lanka** இல் அமைந்துள்ள
**Sq 1205** வீடு **with 3 bedrooms & 2 baths**
உடனடியாக விற்பனைக்கு உண்டு.
**Walking distance to Galle Road, Supermarkets, Delmon Hospital and Banks.**
**Price: CAN $170,000**
**Contact: Bhuvana**
**(613) 983-0077**
(deeds available)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# திக்கம்புரை ரெயிலர்கடை சந்தி — யாழ்ப்பாண நகருக்கான பேருந்து சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்!

பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையை இலகுபடுத்தும் வகையில் வலிகாமம் வடக்கு வயாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடை சந்தியில் இருந்து யாழ் நகருக்கான பேருந்து சேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் வயாவிளான் பகுதிக்கு



சென்றிருந்த சமயம் குறித்த பகுதி மக்கள் தமது போக்குவரத்து பிரச்சினையின் அசௌகரியங்கள் குறித்து எடுத்துக் கூறி தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் குறித்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரின் பணிப்புக்கமைய வட பிராந்திய போக்குவரத்து சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு 16.04.2024 அன்று குறித்த சேவையை முன்னெடுக்க ஏற்பாடு செய்திருந்தது.



இதற்கமையவே காலை 07 மணியளவில் குறித்த பேருந்து சேவையை வைபவ ரீதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதேநேரம் குறித்த பேருந்து சேவையானது வயாவிளான் சுதந்திரபுரம் ஊடாக வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி பொன்னையா வீதி வழியாக குரும்பசிட்டி, கட்டுவன் சந்தி ஊடாக சென்று தெல்லிப்பளை வைத்தியசாலையை அடைந்து கேகேஎஸ் வீதி வழியாக யாழ் நகரை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வறுத்தலைவிளான் சாந்தை சந்தி வரையிலான சேவையை தையிட்டி ஆவளைச் சந்தி வரை நீடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஆரம்ப வைபவமும் இன்றையதினம் காலை 6.30 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு ஆளுநரின் வாகனத் தொடரணி விபத்து — மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியது





வட மாகாண ஆளுநர் பி எஸ் எம் சாள்ஸ் பயணித்த உத்தியோக பூர்வ வாகனம் யாழ்ப்பாணம் மீசாலைப் பகுதியில் விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் தொடர்பை தெரியவருவது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வட மாகாண ஆளுநரின் வாகனம் முன்னாள் சென்று கொண்டிருந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

முன்னாள் சென்று கொண்டிருந்த வாகனம் பாதசாரிகள் கடவையில் வேகத்தை கட்டுப்படுத்திய நிலையில் வேகத்துடன் பயணித்துக் கொண்டிருந்த ஆளுநர் வாகனத் தொடரணி வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் முன்னாள் சென்று கொண்டிருந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

# தமிழ் மக்களின் சுமைதாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ் விளங்குகிறார் என்கிறார் யாழ்ப்பண பல்கலை துணைவேந்தர்!



ஆயுதப் போராட்ட காலங்களிலும் சரி ஜனநாயக வழிமுறையினூடாகவும் சரி தமிழ் மக்களின் சுமைதாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்துவருகின்றார் என தெரிவித்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிறீ பற்கணராஜா அமைச்சர் முன்னெடுக்கும் முயற்சிகள் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயர்ப்பனவாகவே இருந்து வந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் அமைச்சர் இளைஞராக இருந்த காலத்தில் அவரது செயற்பாடுகள் எவ்வாறானதாக இருந்ததென்பதை நினைவு கூர்ந்திருந்ததுடன் மேலும் கூறுகையில்,

இன்றுள்ள அரசியல்வாதிகளுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேறுபட்டவராகவே இருக்கின்றார். அவர் மக்களுக்கான தேவைப்பாடை அறிந்து அவர்களது நலன்கள் அவர்களது எதிர்காலம் அவர்களது பொருளாதாரம் என்பன எவ்வாறானதாக இருக்க வேண்டும் அல்லது கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறு உருவாக்கி கொடுக்கப்பட வேண்டும் என்பதிலேயே அதிக கரிசனையானவராக இருக்கின்றார்.

அந்தவகையில் தமிழ் மக்கள் இவ்வாறான ஒருவரை மிகவும் நேசிப்பவர்களா இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் கல்வித்தரம் மேலும் உயர்வடைவதற்கான பல்வேறு முயற்சிகளை குறிப்பாக எவ்வாறான தடைகள் இருந்தபோதிலும் அதன் உச்சிவரை சென்ற அவற்றை உடைத்து வெற்றிபெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

இதற்கு சான்றாக கிளிநொச்சி அறிவியல் நகரும் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் சான்று பகர்கின்றன. அதுமட்டுமல்லாது பின்தங்கிள் கிராமங்களின் விளையாட்டுத்துறை கல்வி அகியவற்றில் மட்டுமல்லாது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரங்களிலும் அதிக அக்கறை செலுத்தி வருவதை பார்க்க முடிகின்றது.

அதேவேளை அமைச்சரின் அரசியல் சாணக்கியத்தினூடாக தொழிவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. அதேபோன்று எதிர்காலத்திலும் எமது மக்களி எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒரு தகுதியானவராக காணப்படுகின்றார்.

இந்த யதார்த்தத்தினை புரிந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினர் மட்டுமல்லாது மக்களது முன்னெடுப்புக்களும் அமைந்தால் அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகளும் சிறப்பானதாக அமையும் என்பதுடன் அது வெற்றிபெற வாழ்த்துவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும் என்கிறார் கஜேந்திரன் எம்.பி

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் அவர்கள் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 16-04-2024 அன்று முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணனச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன் கடந்த 2024.03.26 இல் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் வெலிக்கடையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒருபடமும் பகிரப்பட்டதாகவும் அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் முயற்சி என்ற பொய்க் குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர்.

ஏற்கனவே அவர் சுமார் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சுமார் 400 பேர் மாத்திரம் அடைக்கப்படக்கூடிய வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் 2286 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் அவர் உள்ளார்.

அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் 16-04-2024 அவரைச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந்தாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னை கைது செய்து அடைத்துள்ளத் தெரிவித்தார்.

மேலும் அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதிகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையினால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருப்பதாகவும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் கோரினார்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களது குரல்வளையை நசுக்கி தமிழர்களை தமது கொத்தடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தை பொலீசாருக்கு வழங்கியுள்ளது. பொலீசார் இனவாதமாகவே செயற்படுகின்றார்கள்.

மீளுருவாக்கம் என்ற பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் ஆனந்தவர்ணன் கைது செய்யப்பட்டுள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனந்தவர்ணன் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும். அத்துடன் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்ட முழுமையாக நீக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம்.

அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டுமெனவும் கோருகின்றோம் என்றுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய விழிப்புலனற்ற மாற்றுத் திறனாளிகள்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

“விழிகள் செய்யும் விந்தையை விரல்கள் செய்யக் காண்பீர்” எனும் தொனிப்பொருளில் பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையம் ஏற்பாடு செய்த திறன் விருத்திக் கண்காட்சி 15-04-2024 திங்கட்கிழமை யாழ் தந்தை செல்வா அறக்கட்டளை மண்டபத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் மங்கள் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பார்வையற்றவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக அவர்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள், இசைக்கருவிகள் இசைத்தல் கிரிக்கெட் விளையாடுதல், நவீன தொலைபேசிகளை இயக்குதல், போன்ற பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டு பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் இன்று நாளையும் இந்த கண்காட்சி தொடரவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண மகளிர் விவகாரம் சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் பொன்னம்பலம் வாகீசனும் கலந்து கொண்டார்.





# கோணேஸ்வரர் ஆலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட 400வது ஆண்டு நினைவுகூரல்!



ஒரு தமிழ் புத்தாண்டு தினத்தன்று போர்த்துக்கேயரால் திருக்கோணேஸ்வரம் அழிக்கப்பட்ட 400வது ஆண்டை நினைவுகூரும் வகையில் தென் கையிலை ஆதீனம் அகத்தியர் அடிகளார் தலைமையில் வடக்கு கிழக்கு பகுதி சிவனடியார்கள், கோணேஸ்வரர் ஆலயத்தில், ஞானசம்பந்தர் அருளிய பாடல்களை பாடி நினைவேந்தலை செய்தனர்.

தொடர்ந்து திருக்கையிலை ஆதீனம் தலைமை உரை ஆற்றினார். இந்த ஆண்டு முழுவதும் இந்த நினைவு தினத்தை, கோணேஸ்வரர் ஆலயம், இலங்கை பூராகவும் உள்ள சைவ அமைப்புகளை இணைத்து முன்னெடுப்பதற்கு அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார், ஆலயம் அழிக்கப்படுவதற்கு முன்னர் அழிக்கப்பட்ட வரலாற்று செய்திகளையும், இலங்கை மக்களது தலைமை கோவிலாக கோணேஸ்வரம் இருந்ததையும், ஆலயம் அழிவதை தடுப்பதற்கு அந்த காலத்தில் திருகோணமலை வாழ் சைவத் தமிழர்கள் செய்த தியாகத்தையும் கூறினார்.

திருகோணமலையின் சைவ அமைப்புக்கள் சார்பில் கலந்துகொண்ட திரு. சிவசங்கரன் (வைத்தியர்), கோணேஸ்வரர் கோவிலை சூழவுள்ள பகுதிகள் ஊர்களின் பெயர்கள் வருவதற்கு காரணமாகவும், அங்கு உள்ள மக்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் கேந்திர மையமாகவும் கோணேஸ்வரர் ஆலயம் இயங்கியகவும், வெறுமனே ஆலயமாக அன்று தமிழர்களது வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கலந்துகொண்ட ஆசிரியை, அறநெறி மாணவர்களுக்கு கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு முழுமையாக கற்பிக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு அனைத்து சைவ சபைகளும் முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட சிவனடியார்களின் முக்கிய தீர்மானங்களாக, கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு குறித்து அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்றும், நாடளாவிய ரீதியில் கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும், இளையோரிடையே ஓவிய - பேச்சு போட்டிகள் நடாத்தப்பட வேண்டும் எனவும், பல்வேறு விதத்தில் இந்த ஆண்டு முழுவதும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.



இத்துடன் கூட்டம் நிறைவுற்றது. இதில் கலந்துகொண்ட சிவன் அடியவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.



கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் Tamil Rights Group அமைப்பு தனது சமீபத்திய சாதனைகளை அறிவிக்கின்றது




Tamil Rights Group தனது சமீபத்திய சாதனைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நுணுக்கமான மூலோபாய வாதங்கள் மற்றும் சட்ட முன்முயற்சிகள் மூலம், ஈழத் தமிழர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கும் தனது பணியை நிறைவேற்றுவதில் TRG குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ் உரிமைக் குழுவானது, செயல்பாட்டின் பரப்பிற்குள் ஒரு முக்கியமான விடயங்களில் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும் விரைவாக மாறியுள்ளது. கடந்த ஆண்டில், இந்த அமைப்பு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அதன் 15வது பிரிவை சமர்ப்பித்தல், மசோதா 104 ஐப் பாதுகாத்தல், கனடாவின் தடைகள் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான முக்கிய பரிந்துரைகளை சமர்ப்பித்தல் மற்றும் கனடாவில் தமிழ் உரிமைகள் குறிப்பு நூலகத்தை நிறுவுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி இந்த முயற்சிகளில் வெற்றியை பெற்றிருக்கிறது.

"எங்கள் சாதனைகளைக் கொண்டாட சிறிது நேரம் ஒதுக்கும்போது, நமது தொண்டர்களும் சமூக உறுப்பினர்களும் நாம் கூட்டாக இலக்கு வைத்துள்ள நேரம், ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை அங்கீகரிப்பது கட்டாயமாகும்" என்று தமிழர் உரிமைக் குழுவின் தலைவரும் அரசிய செற்பாட்டாருமான நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ் கூறுகிறார். உருவாக்கப்பட்ட உத்வேகத்தை கட்டியெழுப்ப, தமிழ் உரிமைகள் குழு ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மைக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் அதன் இலக்கை நோக்கி முன்னேறுகிறது. "எங்கள் முக்கிய முயற்சிகளில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவதால், எங்கள் ஆதரவாளர்களை எங்களுடன் எப்போதும் இணைந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று திரு. ஶ்ரீநாராயணதாஸ் வலியுறுத்துகிறார். மேலும் "ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நீதியின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் உங்கள் ஆதரவு இன்றியமையாதது. எங்களின் கூட்டு இலக்கை அடைய எங்களுக்கு உதவ தன்னார்வலர்கள் மற்றும் நன்கொடைகள் வடிவில் சமூகத்தின் ஆதரவை நாடுகிறோம்", என்றும் ஶ்ரீநாராணதாஸ் தெரிவித்துள்ளார்.

2023 இல் தமிழ் உரிமைக் குழுவின் செயல்பாடுகள் பற்றிய விரிவான கண்ணோட்டத்திற்கு, கீழே உள்ள விரிவான சுருக்கத்தைப் பார்க்கவும்:

TRG தனியார் உறுப்பினர் மசோதா C-281 ஐ ஆதரித்தது, இது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை கனடிய பாராளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் எம்பி பிலிப் லாரன்ஸால் முன்வைத்தது.

உலகெங்கிலும் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு விரைவாக பதிலளிக்குமாறு அரசாங்கத்தை கட்டாயப்படுத்த இந்த மசோதா பாராளுமன்றத்திற்கு உதவும். கனடாவின் தற்போதைய பொருளாதாரத் தடைகளை வலுப்படுத்த TRG தொடர்ந்து வாதிடுகிறது, அதே நேரத்தில் இலங்கையில் மனித உரிமைகளை மீறுபவர்களின் கூடுதல் பெயர்களை பட்டியலில் சேர்க்குமாறு கோருகிறது. மசோதாவின் மூன்றாவது வாசிப்பு ஜூன் மாதம் ஹவுஸ் ஆ.்.ப் காமன்ஸில் நிறைவடைந்தது மற்றும் இரண்டாவது வாசிப்பு தற்போது செனட்டில் நடந்து வருகிறது.

மேலும், TRG எனப்படும் தமிழர் உரிமைகள் மையம் அமைப்பு தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச் சட்டத்தை (TGEWA) பாதுகாப்பதற்காக ஒன்றாறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு தலையீட்டாளர் உண்மையைத் தாக்கல் செய்தது. இந்த முயற்சியானது ஒன்றாரியோ அரசிற்கும் எமது ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலத்திற்கும் வழங்கு ஆதரவு என்று அமைப்பு கருதுகின்றது.

இந்த மேல்முறையீட்டுச் செயல்பாட்டில் தலையீட்டாளராக எங்களின் பங்கு, மேல்முறையீடு செய்பவர்கள் TGEWA இன் நோக்கத்தைத் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்வதாகும். இலங்கையில் தமிழ் மக்களின் இனப்படுகொலை தொடர்பாக முன்வைக்கப்படும் உண்மைகள் குறித்த தவறான மற்றும் தவறான அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. டிசம்பர் 4 ஆம் தேதி, ஒன்றாறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எங்கள் வாய்மொழி சமர்ப்பிப்பு எங்கள் சட்டப் பிரதிநிதியான கோடார்ட் & சண்முகரத்தினம் LLP இன் ஜனனி சண்முகரத்தினம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் நிலுவையில் உள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தில் (IMF) ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளின் நிர்வாக இயக்குநர்களுடன் ஒரு மெய்நிகர் ஆ.்.ப்-ரெக்கார்ட் கூட்டத்தில் வுசுபு கலந்து கொண்டார்.

ஆசிய-பசிபிக் நாடுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிகள், திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து விவாதிப்பதே வட்டமேசைக் கூட்டத்தின் மையமாக இருந்தது. இச்சந்திப்பின் போது, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் நிதி வழங்கல் தொடர்பில் டி.ஆர்.ஜி. நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதில் உள்ளூர் சிவில் சமூகம் மற்றும் பிராந்தியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிக சுயாட்சியைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்தினோம். போருக்குப் பிந்தைய வடக்கு மற்றும் கிழக்கில் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதீத இராணுவச் செலவுகள் குறித்தும் எமது கவலைகளை வெளிப்படுத்தினோம். 2024 இல் ஒரு தொடர் சந்திப்பு திட்டமிடப்பட்டது.

மேலும், TRG வெளியுறவு மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான ஹவுஸ் ஆ.்.ப் காமன்ஸ் நிலைக்குழுவில் உரையாற்றினார்.

கட்பனா நாகேந்திரா கனடாவின் பொருளாதாரத் தடைகளை மேம்படுத்துவதற்கான நுண்ணறிவு மற்றும் பரிந்துரைகளை வழங்கினார். TRG இன் பரிந்துரைகளில் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அதிக அதிகாரிகளை உள்ளடக்கிய பொருளாதாரத் தடைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பிற நீதி வழிமுறைகளுடன் இணைந்து Magnitsky சட்டம் அல்லது SEMA ஆகியவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும். இலங்கையில் தன்னிச்சையான தடுப்புக்காவல், தமிழ் பிராந்தியங்களில் இராணுவ பிரசன்னம் மற்றும் அமைதியான போராட்டங்களைத் தடுப்பது போன்ற மனித உரிமை மீறல்களை கட்பனா எடுத்துரைத்தார். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைத் தீர்ப்பதற்கு, ICC உட்பட, சர்வதேச நீதிப் பொறிமுறைகளை ஆதரிக்க கனடாவுக்கு TRG வாதிட்டது; மற்றும் TRG இன் ICC சமர்ப்பிப்பைக் குறிப்பிடும் UNHRC உயர் ஆணையரின் 2022 அறிக்கையின்படி, பொருளாதாரத் தடைகள் பரந்த பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு ஒரு படியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.


மேலும், தமிழர் உரிமைக் குழு கனடா தலைமையகத்தைத் திறந்து வைத்துள்ளது.

கனடாவின் தமிழீழச் சங்கத்தின் முதல் பெண் தலைவரான மறைந்த திருமதி மகேஸ்வரி நடராஜாவின் பெயரால் பெயரிடப்பட்ட மகேஸ்வரி நடராஜா தமிழ் உரிமைகள் குறிப்பு நூலகத்துடன் இணைந்து TRG தனது புதிய அலுவலகத்தை ஒன்றாறியோவின் மார்க்கமில் திறந்து வைத்தது. நடராஜா குடும்பத்தினரின் தாராள நன்கொடை மற்றும் மறைந்த டாக்டர் வின்ஸ்டன் பஞ்சாட்சரம் இலக்கியத் தொகுப்பின் நன்கொடையுடன் இந்த நூலகம் தொடங்கப்பட்டது.

கனடிய அமைச்சரான மாண்புமிகு மேரி இங் உட்பட மத்திய அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள அவுஸ்த்திரேலியா எழுத்தாளர் வேலு பாரி எழுதிய "மௌனத்தீவு" நூல் வெளியீட்டு விழா

கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள அவுஸ்த்திரேலியா வாழ் எழுத்தாளர் வேலு பாரி அவர்களின் "மௌனத்தீவு" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு இந்த வெளியீட்டு விழா வெற்றிகரமாக நடைபெற ஆதரவு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.





# யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் கார் மோதி விபத்து!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் கார் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளினை செலுத்திய இளைஞன் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, 16-04-2024 செவ்வாய்க்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகில் நின்ற கார் வீதியை கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிலுடன் மோதுண்டு மோதுண்டு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞன் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிசார் இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு பார்வை ஆய்வு அட்டைகளை கையளித்த மாகாண ஆளுநர்!

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள் (Vision charts) கௌரவ ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பார்வைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயல்திட்டத்தின் ஒரு கட்டமாக பார்வை ஆய்வு அட்டைகளை (Vision charts) உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில், கௌரவ ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் அவர்களிடம் பார்வை ஆய்வு அட்டைகள் இன்று (17-04-2024) கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவன் அவர்களின் வழிநடத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த விசேட செயல்திட்டத்திற்கான பார்வை ஆய்வு அட்டைகளை, Vision care நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் கௌரவ ஆளுநரிடம் கையளித்தனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமானது. அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள், வலயக் கல்வி பணிமனைகளூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத்திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான பார்வை தொடர்பில் ஆராய்வதற்கான பார்வை ஆய்வு அட்டைகளே (Vision charts) இன்று கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆளுநரின் செயலகத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டு, அங்கிருந்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



# முத்தையன்கட்டு கிராமிய மீனவர் அமைப்பின் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்!

தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையோடு முல்லைத்தீவு முத்தையன்கட்டு கிராமிய மீனவர் அமைப்பினரால் செயற்படுத்தப்படும் சமூக பங்களிப்புடனான மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கள விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குறித்த மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு சென்றிருந்த அமைச்சர் நிலையத்தின் செயற்பாடுகளை ஆராந்துள்ள நிலையில் அங்கு கைவிடப்பட்டுள்ள நிலையில் காணப்படும் மீன்குஞ்சு வளர்ப்பு தொட்டிகளை புனரமைப்பு செய்வதற்கான மதிப்பீடுகளை சமர்ப்பிக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேநேரம் குறித்த தொட்டிகள் புரனமைக்கப்பட்டல் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை சுமார் பத்து இலட்சம் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய நிலை தேற்றுவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உள்ளூர் உற்பத்தி நிலைகளை வலுப்படுத்துவதன் ஊடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்கிறார் டக்ளஸ் தேவானந்தா



உள்ளூர் உற்பத்தி நிலைகளை வலுப்படுத்துவதன் ஊடக உற்பத்தி பொருள்களின் அளவு நிலைகளை அதிகரிப்பதுடன் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் இருப்பதை உறுதிசெய்ய அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகளும் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக மாவட்டத்தின் பொருளாதார வசதிகளை எவ்வாறு மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போ-தே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் துறைசார் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேவிபுரம் பகுதியில் பெண் முயற்சிகாளர்களால் மேற்கொள்ளப்படும் நியூ லக்ஷ்மி தையல் உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்றையதினம் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 17.04.2024 விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த மாவட்டத்தின் பல்வேறு தரப்பினருடனும் கலந்தரையாடல்கள் மற்றும் கள விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

இதன் ஓர் அங்கமாக முல்லைத்தீவு தேவிபுரம் நியூ லக்ஷ்மி தையல் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் செய்து பெண் தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் உற்பத்தி பொருட்களை பார்வையிட்டு அவர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

பெண் தொழில் முற்சியாளரான விஜயலக்ஷ்மி என்பவரினால் நிறுவப்பட்டுள்ள குறித்த நிலையத்தில் தொழில் முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்த்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கிலேயே அமைச்சரது குறித்த விஜயம் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் அனைத்தும் உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அதுதொடர்பான அறிக்கை ஒன்றை இரண்டு வார காலத்தில் சமர்ப்பிக்குமாறும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்புக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கும் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்தில் அதிகமாக மேற்கொள்ளப்படும் வெளிச்சம் பாச்சி மீன் பிடியில் ஈடுபடுவதினால் சிறுதொழிலில் ஈடுபடுகின்ற தாங்கள் பாதிக்கபடுவதாக முறையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகவியலாளர்களில் வீட்டு வசதியற்றவர்களுக்கு வீடுகள் மற்றும் பணம்

## தமிழ் ஊடகவியலாளர்களை விலைக்கு வாங்க முயலும் அரசியல் கட்சிகள்





ஊடகவியலாளர்களை தமது கைகளுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணப்பாடு வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் தொடர்க்கம் வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பிரவலாக உள்ளது.

அவ்வகையில் ஊடகவியலாளர்களை தமக்கு சாதகமாக வைத்திருக்க அவர்களுக்கு பல சலுகைகளை அரசுகள் அளிக்கவும் செய்கிறது. ஆனால் அது வெளிப்படுத்தப்படும் போது வேலை பறிபோவது என்னமோ அந்த செய்தியாளருக்கு தான். தேச-ிய அளவில் சில வேளைகளில் இது மிகப்பெரும் ஊழலாக வெளியாகி அரசுகள் கவிழ்ந்த வரலாறும் உண்டு.

இலங்கையிலும், அதிலும் குறிப்பாக தென்னிலங்கையிலும் செய்தியாளர்களை அரசு "மகிழ்ச்சியக வைத்திருக்கும்" நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. அதுவும் போர்க்காலத்தில் வடக்கில் நடைபெறும் விஷயங்களை மறைக்கவும், தமக்கு சாதகமான செய்திகளை தென்னிலங்கையில் பரப்பவும் ஊடகவியலாளர்கள் அதிலும் குறிப்பாக அரச சார்பு நிறுவனங்களின் செய்தியாளர்கள் நிர்பந்திக்கப்பட்டார்கள் அல்லது அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு அவர்கள் வழிக்கு கொண்டுவரப்பட்டார்கள்.

போர் முடிந்து 15 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், வடக்கே யாழ்ப்பாணத்திலும் அரசியல்வாதிகள் செய்தியாளர்களை சித்திரைப் புத்தாண்டு அன்று அழைத்து அன்பளிப்புகளை கொடுத்துள்ளது தெரியவந்துள்ளது.

அவ்வகையில் யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்களிற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் பண உதவி புரிவதாக பல்தரப்பிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளது.

2024 ஆம் ஆண்டு பிறந்தபோது யாழ் நகரின் ஓர் விடுதிக்கு ஊடகவியலாளர்கள் 20 பேரை அழைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விருந்தோடு 10 ஆயிரம் ரூபாவிம் வழங்கியிருந்தார்.

தற்போது சித்திரைப் புத்தாண்டிற்கும் சிறிதர் திரைரங்கிற்கு செய்தியாளர்களை அழைத்து அவர்களுக்கு தலா 20 ஆயிரம் ஆயிரம் ரூபா பண அன்பளிப்பு வழங்கியிருக்கிறார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சித்திரைப் புத்தாண்டிற்கு அவரது கந்தரோடையில் உள்ள வீட்டிற்கு ஊடகவியலாளர்களை அழைத்து தலா 10 ஆயிரம் ரூபா என கைவிசேசமாக வழங்கியிருந்தார்.

இவ்வாறே வடமராட்சி தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் வருட தினத்தன்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனது ஆதரவாளர்கள் சகிதம் சில ஊடகவியலாளர்களையும் அழைத்து 500 ரூபா வீதம் கைவிசேசம் வழங்கியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் இவ்வாறு பலரிடமும் பணம் பெற்றமை பொதுவெ-ளியில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களில் செய்தியாளர்களின் பக்கசார்பின்மை குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறிதர் தியட்டரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடக சந்திப்பில் பங்குகொண்ட ஊடகவியலாளர்களில் வீட்டு வசதியற்ற ஊடகவியலாளர்கள் உங்கள் விபரங்களைச் சமர்ப்பித்தால் வீட்டு வசதி ஏற்படுத்தி கொடுக்கலாம் என அமைச்சர் தெரிவித்தநிலையில் 20 பேர் வரையான ஊடகவியலாளர்கள் அதற்கும் பெயர் விபரங்களை சமர்ப்பித்துள்ளதாக அறிய முடிகிறது.

# வட கடல் நிறுவனத்தின் யாழ். அலுவலகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

## நிறுவனத்தின் வளர்ச்சிப் போக்கு குறித்து பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்!





நோர்த் சீ எனப்படும் வட கடல் நிறுவனத்தின் யாழ். அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட கடல் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடல் 18.04.2024 மாலை இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற நிறுவனங்களில்ஒன்றானவடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளை சீராக முன்னெடுத்து, குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வலை உற்பத்தி செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்தல் மற்றும் இலாபத்தை ஈட்டும் வகையிலான பொறிமுறைகளை தயாரித்தல் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

முன்பதாக கடந்த காலத்தில் இந்த நிறுவனத்தில் பல்வேறு முறைகேடுகள் பாகுபாடுகள் இருந்தமையால் நிறுவனத்தின் உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டது. அத்துடன் ஊழியர்கள் துறைசார் தேவைக்கேற்ப நியமிக்கப்படாத நிலையும் இருந்துள்ளது.

அதேவேளை வேலைத்திட்டம் நடைபெற்றதற்கான ஆவணங்கள் முழுமையாக காணப்படாத முழுமையாக செயலற்றுப்போன நிலை இருந்தது. அத்துடன் புதிய நிர்வாகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதனூடாகவே நேர்மையான உழைப்பை உருவாக்கிக்கொள்ள முடியும் என நிறுவனத்தின் நலன்விரும்பிகள் அமைச்சரிடம் வலியுறுத்தி வந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த நிறுவனத்தின் நிலைமைகளை முழுமையாக அவதானத்தில் கொண்ட அமைச்சர், செயற்றிறனற்ற நிர்வாகத்தினரது நடவடிக்கைகளால் பாரிய நட்டத்தில் இருந்த குறித்த நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் துரித மாற்றத்தை கொண்டுவந்திருந்திருந்தார்.

அத்துடன் தனது பொறுப்பில் உள்ள நிறுவனங்களில் ஊழியர்கள் அனைவரும் பாகுபாடு அற்ற வகையில் ஒற்றுமையுடன் பணியாற்றி சிறப்பான சேவையை வழங்கவேண்டும் என்றும் அனைவரது ஒருமித்த உழைப்பினூடாகவே நிறுவனங்கள் முன்னெடுக்கும் பணிகளின் இலக்கை எட்ட முடியும் எனவும் குறித்த ஊழியர்களிடம் வலியுறுத்தியிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் குறித்த நடவடிக்கைகளை அடுத்து குறித்த நிறுவனம் தற்போது சிறப்பான நிலையில் இயங்குவதுடன் உற்பத்திகளூடாக இலாபமீட்டும் நிறுவனமாகவும் வளர்ந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பெண்கைதிகளுக்கான சீர்திருத்த சிகிச்சைத் திட்டம்



இன்றைய மாறிவரும் உலகில் அதிகமான குற்றச் செயயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர்.இத்தகைய குற்றவாளிகளைப் புணர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற மிக முக்கியமான பணியினை யாழ்ப்பாணச் சிறைச்சாலை வழங்குகின்றது. இங்கே சுமார் எழுநூறிற்கும் அதிகமான கைதிகள் புணர்வாழ்வளிக்கப்படுகின்றனர். பல்வேறு குற்றங்கள் புரிந்த கைதிகள் இருந்த போதும் அதிகளவான கைதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆவார் ஆண் கைதிகள் மட்டுமன்றி பெண் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள கைதிகளைப் புணர்வாழ்வளித்து குறிப்பாகப் பெண் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION (IMHO) RATNAM FOUNDATION இணைந்து கடந்த 13.04.2024 அன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர் இது பெண்களுக்கான தையற் பயிற்சிநெறி ஆகும் இந் நிகழ்வை யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஒழுங்குபடுத்தியிருந்தது. இந் நிகழ்வின் பிரதம அதீதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவி ராஜம் தெய்வேந்திரம் அம்மணி நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். நிகழ்விற்கு யாழ்ப்பாண நீதவான் ஆனந்தராசா சிறைச்சாலை அட்தியட்சகர் இந்திரகுமார் NAITA முகாமையாளர் திருமுருகன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




பிரதம அதீதியாகக் கலந்து நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்த ராஜம் தெய்வேந்திரம் அம்மணி உரையாற்றுகையில் குற்றம் செய்தவர்கள் வாழ்நாள் முழுவதும் குற்றவாளிகள் அல்ல சந்தர்ப்ப சூழ்நிலையால் குற்றம் நிகழ்கின்றது இந்தக் குற்றங்களிலிருந்து நீங்கள் எவ்வாறு வெளிவர வேண்டும் மீண்டும் இத்தகைய குற்றங்கள் இடம்பெறாது இருப்பதற்கு உங்களை எவ்வாறு தயார் செய்ய வேண்டும் நீங்கள் உங்களுக்கான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் பயணிக்க வேண்டும் அதற்காகவே இச் சிறிய முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது நீங்கள் அனைவரும் இதனை ஒரு அத்திவாரமாகக் கொண்டு உங்களுக்கான தொழிலை அடையாளம் கண்டு சமூகத்தோடு இணைந்து நற் பிரஜையாக வாழவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நீதவான் ஆனந்தராஜா உரையாற்றுகையில் நீங்கள் நற்பிரஜையாக சீர்திருத்தப்பட்டு சமூத்தோடு உங்களை இணைக்கின்ற நோக்கத்தோடு உங்களை நான் சிறைப்படுத்தினேன் சிறைக்கு உள்ளே இவ்வாறான திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியமை உண்மையில் ஒரு வரப்பிரசாதம் ஆகும் இதை நீங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். இத் திட்டத்தை இங்கு அறிமுகப்படுத்திய IMHO மற்றும் RATNAM FOUNDATION ஆகியோருக்கு பாராட்டுக்களையும் வணக்கத்தையும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் உரையாற்றுகையில் இத்தகைய திட்டம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்ததையிட்டு தான் பெருமையடைவதாகவும் இத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ராஜம் தெய்வேந்திரம் அவர்களிற்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார் அத்துடன் இத் திட்டம் வெற்றியடைவதற்குறிய முழு ஒத்துளைப்புக்களையும் தான் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். இந் நிகழ்வில் கலந்துகொண்ட பெண் கைதிகள் ராஜம் தெய்வேந்திரம் அம்மணிக்கு தமது நன்றியைத் தெரிவித்ததோடு தமது மனக் குறைகளையும் கஸ்டங்களையும் தெரிவித்தனர். தொடர்து அம்மணி சிறைச்சாலையின் பகுதிகளைப் பார்வையிட்டார்.





இவ்வாறான சமுதாயத்திற்குப் பொருத்தமான தேவையாக விடயங்களை உரிய நேரத்தில் காலத்தின் தேவையை அறிந்து சேவையாற்றுகின்ற INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION (IMHO) RATNAM FOUNDATION அதில் சேவையாற்றுகின்ற உறுப்பினர்கள் போற்றுதற்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள்

*"மறுமை நோக்கின்று இவர்கள் கைவண்மை"*

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)




RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# தமிழ்ப் பொது வேட்பாளர்: தேவையா?

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 15 ஆண்டுகளில், அதிகம் பேசு பொருளாக மாறியிருப்பது இந்த முறைதான். அதேபோல அது அதிகம் தரப்புக்களால் முன்னெடுக்கப்படுகிறது என்பதும் இந்த முறைதான். அது மட்டுமல்ல, அது அதிகம் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகும் ஆபத்துக்கள் நிறைந்திருப்பதும் இந்த முறைதான்.

இந்தக் கோரிக்கையை கோட்பாட்டு ரீதியாக முதலில் முன்வைத்தவர் மு. திருநாவுக்கரசு. எனினும் இக்கோரிக்கையை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு விளங்கிக் கொள்ளாமல் பிரயோகித்தவர்கள் குமார் பொன்னம்பலமும் சிவாஜிலிங்கமும் ஆவர்.

மு.திருநாவுக்கரசு 2010 ஆம் ஆண்டு அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த அடுத்த ஆண்டு "பொங்குதமிழ்" என்ற இணையதளத்தில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று கட்டுரை எழுதினார். ஆனால் அந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தரப்பு ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு, அதே ராஜபக்சக்களின் ஆணையை முன்னெடுத்த தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசுவின் கட்டுரையை யாரும் பொருட்படுத்தவில்லை. பின்னர் 2015 ஆம் ஆண்டும் திருநாவுக்கரசு அதே கட்டுரையை சிறு மாற்றங்களோடு எழுதினார். அப்பொழுது ஆட்சி மாற்ற அலை வீசியது. ராஜபக்சக்களை தோற்கடிப்பதற்காக ரணில்+ மைத்திரி கூட்டு ஒன்றை மேற்கு நாடுகளும் இந்தியாவும் சேர்ந்து உருவாக்கின. அப்பொழுதும் தமிழ் மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாகக் கருதிக் கொண்டு இறுதிக்கட்டப் போரில் தற்காலிகமாக பாதுகாப்பு மந்திரியாக இருந்த மத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசு இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் அது தொடர்பாக எழுதிய பின்னரும் தமிழ் அரசியல் சமூகம் அது தொடர்பாக கவனத்தில் எடுக்கவில்லை. அதனால் நோர்வையில் வசிப்பவரும் திருநாவுக்கரசுவின் மாணவரும் ஆகிய ஒரு புலமையாளர் அவரிடம் கேட்டார்... "நீங்களும் திரும்பத் திரும்ப எழுதுகிறீர்கள். ஆனால் யாரும் அதனை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லையே" என்று. அப்பொழுது திருநாவுக்கரசு சொன்னாராம் ஒருமுறை எழுதியதை யாரும் உள்வாங்கவில்லை என்பதனால்தான் அதைத் திரும்ப திரும்ப எழுத வேண்டியிருக்கிறது என்று.

அதன்பின் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வந்த பொழுது தமிழ் மக்கள் பேரவை ஒரு சுயாதீனக் குழுவை உருவாக்கியது. அக்குழு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எல்லாக் கட்சிகளையும் சந்தித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது தொடர்பாக தெளிவான பதில்களைக் கூறவில்லை. கோட்டாபய தனது அமெரிக்கப் பிரஜா உரிமையைத் துறப்பதில் இருக்கும் சட்டச் சிக்கல்களை முன் வைத்து சம்பந்தர் உரையாற்றினார். அதுமட்டுமல்ல, ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களைத் தூண்ட உதவாதா என்றும் அவர் கேட்டார்.

தமிழரசுக் கட்சி அப்பொழுது தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்புக்குள் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகள் துணிந்து முடிவெடுக்கவில்லை. விக்னேஸ்வரன் அதை ஆதரித்தார். ஐங்கரநேசன், அனந்தி போன்றவர்களும் அதை ஆதரித்தார்கள். எனினும் ஒரு கட்டத்துக்கு மேல் அந்த விடயத்தை செயலுருப்படுத்த தமிழ் மக்கள் பேரவையால் முடியவில்லை. அது உருவாக்கிய சுயாதீனக் குழுவானது அது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டதோடு அமைதியடைந்து விட்டது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கும் பல மாதங்களுக்கும் முன்னரே இந்த விடயத்தை முதலில் கையில் எடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் "மக்கள் மனு" என்று அழைக்கப்படும் ஒரு சிவில் சமூகம் அதனை முன்னெடுக்கின்றது. அந்தச சிவில் சமூகம் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இரண்டு கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கிறது. அதே சமயம் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் இது தொடர்பில் சிந்திப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன.

விக்னேஸ்வரன் அது தொடர்பாக வெளிப்படையாகவே பேசி வருகிறார். தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அடுத்தபடியாக அவர் இப்பொழுது அதிகமாகப் பேசி வருகிறார். அவர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரை அவ்வாறு பொது வேட்பாளராக நிறுத்தலாமா என்றும் ஒரு பரிந்துரையைச் செய்திருந்தார். அதேசமயம் ஈழத்துச் சிவசேனையின் தலைவராகிய மறவன்புலவு சச்சிதானந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை பொது வேட்பாளராக சிபாரிசு செய்திருந்தார்.

இவ்வாறாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் இப்பொழுது மேற்பரப்புக்கு வந்து விட்டது. அது அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக மாறிவிட்டது. அதில் பல்வேறு தரப்புகளும் ஈடுபாட்டைக் காட்டுகின்றன. அல்லது அதை குழப்புகின்றன. அவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவைக் குழப்பும் தரப்புகள் அல்லது அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் தரப்புகள், பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முதலாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு ஏற்கனவே தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஒன்று என்பது. குமார் பொன்னம்பலம் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அதில் ஏற்கனவே தோல்வி கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. குமாரும் சிவாஜியும் அதை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு முன்னெடுக்கவில்லை. அவர்கள் தமிழ் வேட்பாளர்கள் தவிர தமிழ் தரப்பில் பெரும்பாலானவர்களின் விருப்பங்களை பிரதிபலித்த பொது வேட்பாளர்கள் அல்ல.

ஆனால் இப்பொழுது பேசப்படுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ் மக்களின் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. அவர் தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலை ஒரு மறைமுக பொது வாக்கெடுப்பாக மாற்றும் அரசியல் நகர்வின் குறியீடு.

தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வரப்போவதில்லை. ஆனால் பெருமளவுக்கு தமிழ் வாக்குகளை அவர் திரட்டும் பொழுது, அவர் தமிழ்க் கூட்டு மனச்சாட்சியின் குறியீடாகப் பார்க்கப்படுவார். தமிழ்ப் பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவார் என்ற கற்பனையோடு யாரும் தமிழ் வேட்பாளரை நிறுத்தவில்லை. அவர் சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை சோதனைக்கு உள்ளாக்குவார் என்ற ஒரு பேர வாய்ப்பு அதில் உண்டு. அதைவிட முக்கியமாக, அவர் தேர்தலில் வெல்லப் போவதில்லை. ஒரு ஜனாதிபதி வேட்பாளராக அவர் தேர்தலில் தோற்பார். ஆனால் அவர் எவ்வளவு வாக்குகளைத் திரட்டுகிறார் என்பது தமிழ் மக்கள் எந்த அளவுக்கு தேசமாக இருக்கிறார்கள் என்பதனை ஒரு குறியீடாக காட்டும். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டி தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக அவர் நிற்பார். அது முதலாவது வெற்றி. தமிழ்த் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவது இரண்டாவது வெற்றி. இலங்கை அரசாங்கம் நடத்தும் ஒரு தேர்தலையே தமிழ் மக்கள் மறைமுக பொதுசன வாக்கெடுப்பாக மாற்றலாம் என்பதும் ஒரு வெற்றி தான். எனவே அந்தத் தேர்தல் களத்தை தமிழ் ஐக்கியத்தை கட்டி எழுப்புவதற்கான ஒரு பரிசோதனை வாய்ப்பாக பயன்படுத்துவதுதான் தமிழ்ப் பொது வேட்பாளரின் நோக்கமே தவிர, வென்று ஜனாதிபதியாக வருவது அல்ல.

இரண்டாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளின் தோல்வியாகக் காட்டப்படும் என்பது. உண்மைதான். ஆனால் தேர்தல் என்று வந்தால் வெற்றி மட்டும் தான் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தரப்பை ஒன்றிணைப்பதற்கான மிக வலிமையான ஒரு செய்முறையாக அது இருக்கும் என்பதே வெற்றி தான். அங்கு தேர்தல் வெற்றியை மட்டும் வைத்து அந்த முயற்சியின் இறுதியான விளைவை மதிப்பிட வேண்டியதில்லை.

கடந்த 15 ஆண்டுகளிலும் இம்முறை பொது வேட்பாளர் என்ற கோரிக்கை மேற்பரப்புக்கு வந்திருப்பது ஒரு வெற்றி. அதை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி மேலே உயர்த்துவது என்று தமிழ்த் தரப்பு சிந்தித்து ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

மூன்றாவது காரணம், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களைத் தூண்டிவிடுவார் என்பது. சம்பந்தர் திரும்பத் திரும்ப அதைச் சொல்லுகிறார். தமிழரசு கட்சிக்குள் ஒரு பகுதியினரும் அதைக் கூறுகிறார்கள். அவ்வாறு தூண்டப்படும் சிங்கள வாக்காளர்கள் ராஜபக்சக்களுக்கு வாக்களிப்பார்கள் என்றும் எனவே ராஜபக்சக்களை வெற்றி பெற வைப்பதற்குத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூற வருவதன் கோட்பாட்டு விளக்கம் என்னவென்றால், தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டினால் அல்லது தமிழ் மக்கள் தனித்து முடிவு எடுத்தால், அது சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடும் என்பது. ஆனால் இங்குள்ள அடிப்படைக் கேள்வி என்னவென்றால், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் இப்பொழுது மட்டும் என்ன (தொடர்ச்சி 16ம் பக்கம்)



# வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள் 'அழையா விருந்தாளியாக' சச்சிதானந்தன் – எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறினார்கள் மக்கள்



- நடராசா லோகதயாளன்

**வெ**டுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள் அழையா விருந்தாளியாக சிவசேனை அமைப்பினர் சென்றமையால் ஆலய பக்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறியதுடன் பழைய நிர்வாகத்தைத் தொடரவும் முடிவு எடுத்துள்ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மாவட்ட மட்ட தெரிவுகளுக்கான பொதுக்கூட்டம் இன்று காலை ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆலயப் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், ஆலயப் பக்தர்கள், வேலன் சுவாமிகள், வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டு கூட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன்போது, ஆலய நிர்வாகத்தின் அழைப்பின்றி சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், விபுலானந்த சுவாமிகள் உள்ளிட்ட ஒரு குழுவினர் அங்கு வருகை தந்திருந்தனர். குறித்த குழுவினர் குருந்தூர்மலை விகாராதிபதியை இரகசியமாகச் சந்தித்து அதற்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறி, மக்கள் குறித்த குழுவினரை வெறியேறி நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கோரினர். அத்துடன் சிவசேனை முன்னிலையில் நிர்வாகத் தெரிவு இடம்பெறமாட்டாது எனவும், வெடுக்குநாறிமலையில் பல பிரச்சினைகள் நடந்தும் சிவசேனை அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை எனவும், ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை எனவும் மக்கள் தெரிவித்ததுடன், அவர்களை வெளியேறுமாறும் கோரினர்.



எனினும், சிவசேனை அமைப்பினர் வெளியேறாமையால் ஆத்திரமடைந்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஆலயப் பக்தர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியதுடன், ஒரு வருடத்துக்குத் தற்போதைய நிர்வாக சபையே தொடர்ந்து இயங்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியதுடன், மக்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

மக்கள் சென்ற பின்னும் சிவசேனை அமைப்பினர் பொது நோக்கு மண்டபத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

# நெடுந்தீவு பகுதியில் இடிந்து வீழ்ந்த நீர்த் தாங்கியை அமைத்தது யார்? மாவட்ட செயலகத்தில் பரபரப்பு

- நடராசா லோகதயாளன்

**நெ**டுந்தீவுப் பிரதேசத்தில் இடிந்து வீழ்ந்த நீர்த் தாங்கியை அமைத்தது யார் எனத் தெரியாத நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரியினால் மாவட்டச் செயலகத்தில் நகைப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற சமயம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுலா மையம் தொடர்பில் ஆராய்ந்த சமயமே இவ்விடயம் இடம்பெற்றது.

மண்டைதீவில் ஓர் சுற்றுலா மையம் தடுக்கப்பட்டபோதும் அதிகாரிகள் தாம் நினைத்த விடயத்தை செய்தே தீருவோம் என ஒற்றைகாலில் நின்று நிறைவேற்றினர். ஆனாலும் எத்தனை மாதங்கள் இயங்கின அதனால் பலகோடி ரூபா நாசமாகியது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியபோது அது எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா கோரினார்.

அது 2019இல் முன்மொழியப்பட்ட திட்டம் என்றபோது அது உங்கள் காலம் அல்லவா என அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை நோக்கி வினாவியபோது அப்போதே இந்த இடம் பொருத்தம்மற்றது அதனால் இங்கே மேற்கொள்ள வேண்டாம் என நான் பல தடவை தடுத்தேன் அதிகாரிகள் கேட்கவில்லை என நாடாளுமன்ற உறுப.பினர் சி.சிறிதரன் பதிலளித்ததோடு நெடுந்தீவில் நீங்கள் ஓர் நீர்த்தாங்கி கட்டிநீர்களே அது என்ன நிலைமை என பதில் வினாத் தொடுத்தார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா அது எப்போது யாரால் கட்டப்பட்டது என வினாவியபோது இதற்குப் பதிலளித்த நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி அது ஒப்பந்தகாரரினால் கட்டப்பட்டது என பதிலளித்தபோது அதிகாரிகளின் பெருமை என மண்டபமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.

Canadian Tamil Sankam
PADIMURAI TAMIL FEDERATION
உலகத் தமிழாசிரியர் பேரவை
World Tamil Teachers' Organisation
ABC
Historical and Cultural Studies
UNIVERSITY OF TORONTO
SCARBOROUGH

15-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு
தமிழக அரசின் கல்விக்கான விருது - 2023



தமிழக அரசினால் நடத்தப்படும் அயலகத்தமிழர்களின் மாநாடானது தைமாதம் 11, 12 ஆம் திகதிகளில் சென்னையிலில் நடைபெற்றது. அவ்வேளையில், 2023 ஆம் ஆண்டின் கல்விக்கான தமிழக அரசின் விருது படிமுறைத்தமிழ் ஒன்றியத்தின் தலைவரான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. முருகேசு பரமநாதன் அவர்களுக்குத் தமிழக முதல்வர் திரு. மு. க. ஸ்ராலின் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது. படிமுறைத்தமிழ் ஒன்றியம் என்பது, படிமுறைத்தமிழ் எனும் கற்பித்தல் முறையைப் பின்பற்றி உலகெங்கும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகளின் கூட்டமைப்பாகும். இக்கற்பித்தல் முறையின் நிறுவனர் கனடாவைச் சேர்ந்த சித்தம் அழகியான் சு. இராசரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இருப்போர் திரு. லோகன்கணபதி MPP, செல்வம்அடைக்கலநாதன் MP, அமைச்சர் செஞ்சி மஸ்த்தான், ஆளுனர் செந்தில் தொண்டமான்

• உலகின் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் சங்கமம்.
• அவுஸ்ரேலியா, மலேசியா, பிசி, சிங்கப்பூர், தமிழ்நாடு, மொரிசியஸ், தென்ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின்... ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆய்வரங்கம்.

தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
இடம் – ரொராண்டோ பல்கலைக் கழகம், ஸ்காபுரோ வளாகம்
1265 Military Trail, Toronto, ON
காலம் - 2024 யூன் 1, 2, 3
நேரம் - 9 AM முதல் 9 PM வரை
மேலதிக விபரங்களை அறிய
wtcc@padimuraitamil.com padimuraitamil.com 416-821-5773 | 416-843-9514

# ரணிலின் முதல் "எதிரி" யார்?



**இலங்கையின் பிரதமராக 6 தடவைகள் ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்து வரலாற்று சாதனை படைத்த போதும் ஒருதடவை கூட பிரதமர் பதவிக் காலத்தை முழுமையாக பூர்த்தி செய்ய "துரதிர்ஷ்டம்" அவரை அனுமதிக்கவில்லை. அத்துடன் கட்சித் தலைமைப் பதவியும் எதிர்க் கட்சித்தலைவர் பதவியும் அவரின் கட்சித்தலைவர்களின் படுகொலைகளின் வழியாகவும் தற்போதைய ஜனாதிபதி பதவி கூட மக்கள் போராட்டங்கள், வன்முறைகளின் விளைவாகவுமே ரணில் விக்கிரமசிங்கவை வந்தடைந்தன.**

**- கே. பாலா**

இலங்கையின் ஜனாதிபதியாக வேண்டுமென்ற நீண்டகால கனவில் இருந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு கட்டத்தில் அந்தக்கனவை தானே கலைத்து விட்டு பிரதமர் பதவியிலாவது ஒரு தடவையாவது அதற்குரிய காலம் வரை நிலைத்து இருக்க வேண்டுமெனப் போராடிய போதும் அவருக்கும் அந்தப் பிரதமர் பதவியை இடையிலேயே பறித்துவிடும் துரதிர்ஷ்டத்துக்குமிடையிலான போட்டியில் ஆறு தடவைகள் பிரதமர் பதவியை பறி கொடுத்து தோற்றுப்போன ரணில் விக்கிரமசிங்க எதிர்பாராத நிலையில் தற்போது நாட்டின் ஜனாதிபதியாகி விட்டார். எனினும் பிரதமர் பதவிகளின்போது தன்னை அந்தப் பதவிகளில் நீடித்திருக்க விடாது ஆப்படித்த துரதிர்ஷ்டம் அவரை விடாது துரத்துவதால் இப்போது ஜனாதிபதி பதவியை காக்கவும் மீண்டும் ஜனாதிபதியாகவும் போராடத் தொடங்கியுள்ளார்.

1948 ஆம் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் முதலாவது அரசை அமைத்ததுடன் பின்னரும் பல தடவைகளில் ஆட்சி பீடமேறிய சேனநாயக்க குடும்பத்தின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கையில் 2020 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத்திற்கான தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட பெறமுடியாது வரலாற்று தோல்வியடைந்த போதும் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக தனி ஒருவனாக பாராளுமன்றம் வந்து இன்று ஜனாதிபதியாக பதவி வகிக்கும் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை மிகப்பெரும் அதிர்ஷ்டக்காரர், 95.100 ஆசனங்களைப்பெற்றும் ஜனாதிபதியாக முடியாத அவரை அதிர்ஷ்டம் ஜனாதிபதியாக்கியுள்ளது என்று கூறுவோருக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் இடையில் பல வருடங்களாக நடந்த போட்டியும் அதில் ரணில் விக்கிரமசிங்க தொடர் தோல்வியடைந்த வரலாறும் தெரியாதிருக்கலாம்.

இலங்கையின் பிரதமராக ஒரு தடவையேனும் அதற்குரிய காலம் வரைக்கும் நீடித்திருக்க சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல் போராடியபோதும் இறுதிவரை அதில் வெற்றிபெற முடியாமல் தோற்றுபோனவரும் தற்போது அதிர்ஷ்டத்தில் கிடைத்தது எனக் கூறப்படும் ஜனாதிபதி பதவியை பாதுகாக்கவும் மீண்டும் ஜனாதிபதியாகவும் போராடும் ரணில் விக்கிரமசிங்கவை விடாது துரத்திய.துரத்தும் துரதிர்ஷ்டம் தொடர்பில் பார்ப்போம்.

ரணில் விக்கிரமசிங்க தனது ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வியை கொழும்பு, ரோயல் கல்லூரியில் பயின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த இவர், 1972 ஆம் ஆண்டில் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞராக இணைந்து ஐந்து வருடங்கள் ஒரு வழக்கறிஞராக கடமையாற்றினார். 1977 ஆம் ஆண்டு தனது 28ஆவது வயதில் பியகம தேர்தல் தொகுதி மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவான இளம் சட்டத்தரணியான இவர் தனது பல்கலைக்கழக நாட்களில் இருந்தே ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணியில் பணியாற்றி வந்தார். அத்துடன் 1975 ஆம் ஆண்டு பியகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அந்தக் காலகட்டத்தில் வயதில் மிகவும் குறைந்த அரசியல்வாதியாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்தனவின் தலைமையிலான அரசாங்கத்தில் வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அசாதாரணமான மதிநுட்பம் மற்றும் பணியாற்றுவதற்கான தனித்துவம் மிக்க மன ஆற்றல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பின்னர், அவர் இளைஞர் விவகார மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் கல்வி அமைச்சராகவும் பணியாற்றிவந்த ரணில் விக்கிரமசிங்க, அரசியல் விவகாரங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவு பெற்றவர் என்ற வகையில், 1989ஆம் ஆண்டில் ஜனாதிபதி பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்தில் சபை முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவை மட்டுமன்றி, அவர் கைத்தொழில் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சராகவும் இருந்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதி என்று அரசியலில் பல்வேறு பதவிகளை வகித்து பழுத்த அனுபவத்தைப் பெற்றவர்.

1977ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இலங்கைப் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே பாராளுமன்ற உறுப்பினர், இலங்கையில் 6 தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர், 4 தடவைகள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்தவர் என்ற பெருமைகள் ரணில் விக்கிரமசிங்கவும் மட்டுமே உண்டு. டட்லி சேனநாயக்க மற்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் மூன்று தடவைகள் மாத்திரமே பிரதமர்களாக இருந்துள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க 6 தடவைகள் பிரதமராக இருந்துள்ளார். அதே போன்றே பிரதமர் பதவியும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவியும் எதிர்க் கட்சித்தலைவர் பதவியும் அக்கட்சியின் தலைவர்கள் தற்கொலைக்குண்டுத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த வரலாறும் உண்டு.


அதாவது 1993 மே மாதம் முதலாம் திகதி அப்போது ஜனாதிபதியாகவிருந்த ரணசிங்க பிரேமதாச கொழும்பு ஆமர் வீதி சந்தியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார். இதனையடுத்து பிரதமராகவிருந்த டி.பி. விஜேதுங்க இடைக்கால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதையடுத்து ஏற்பட்ட பிரதமர் வெற்றிடத்துக்கு 1993 மே 17 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். இதுவே ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரதமராக பதவி வகித்த முதல் சந்தர்ப்பமாகவிருந்தபோதும் 1994 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வரையே அப்பதவியில் அவரால் நீடிக்க முடிந்தது. இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் முதல் தடவையாக பதவி இழந்தார்.

1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் பொதுஜன முன்னணியில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஜனாதிபதியாகிய நிலையில் 2000 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் அவரின் கட்சி வெற்றிபெற்றபோதும் அதன்பின்னர் ஏற்பட்ட குழப்பங்களையடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றதையடுத்து ரணில் விக்கிரமசிங்க இரண்டாவது தடவையாக பிரதமரானார். இந்த அரசில் ஜனாதிபதியாக சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்கவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தனர். ஆனால் இருவருக்குமிடையில் ஏற்பட்ட இழுபறிகளினால் ஆட்சிக்காலம் முடியுமுன்னரே ஜனாதிபதியான சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்கவினால் 2004 ஆம் ஆண்டு அரசு கலைக்கப்பட்டது. இதனால் ரணில் விக்கிரமசிங்க 2001 டிசம்பர் 9 ஆம் திகதி முதல் 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி வரையே பிரதமராக இருக்க முடிந்தது. இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் இரண்டாவது தடவையாக பதவி இழந்தார்.

இதன்பின்னர் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஐக்கியதேசியக் கட்சி மற்றும் அதன் பங்காளிக்கட்சிகளின் ஆதரவுடன் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதையடுத்து ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 2015 ஜனவரி 9 ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டபோதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் புதிய அரசொன்றை அமைப்பதற்காக 2015 ஜூன் 26 ஆம் திகதி நள்ளிரவு பாராளுமன்றத்தைக் கலைத்து, 2015 ஆகஸ்ட் 17 இல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டதனால் 8 மாதங்கள் மட்டுமே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருந்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் காபந்து அரசொன்று செயற்படுமென்பதனால் 2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்தார். இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் மூன்றாவது தடவையாக பதவி இழந்தார்.

இந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெற்றதையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைவராகவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து நல்லாட்சி அரசொன்றை அமைத்தது. இந்த அரசில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார் என-ினும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளையடுத்து. 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த மகிந்தராஜபக்சவை பிரதமராக நியமித்தார். இதனால் தனது பிரதமர் பதவிக்குரிய காலம் முடியுமுன்னரே ரணில் பதவியை இழந்தார். இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் நான்காவது தடவையாக பதவி இழந்தார்.

எனினும் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி நீக்கியமை தொடர்பில் நீதிமன் றத்தில் தொடரப்பட்ட வழக்குகளையடுத்து வழக்கு தீர்ப்புக்கள் அடிப்படையில் மீண்டும் ஐந்தாவது தடவையாக 2018 டிசம்பர் 16 ஆம் திகதி பிரதமராகப்பதவியேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க 2019 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றதையடுத்து 2019 நவம்பர் 20 இல் பிரதமர் பதவியைத் துறந்தார். இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் ஐந்தாவது தடவையாக பதவி இழந்தார்.



இதனையடுத்து 2020 பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிட்டாலும், கட்சியில் இருந்து எவரும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகாமல் வரலாற்றுத் தோல்வியை சந்தித்தது. ரணில் விக்கிரமசிங்க கூட தோல்வியடைந்தார். ஆனால் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மூலம் அவர் மட்டும் 2021 ஜூன் 23 ஆம் திகதி பாராளுமன்றம் வந்தார். இவ்வாறான நிலையில்கோத்தபாய ராஜபக்ஸவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்ததன் விளைவாக மகிந்த ராஜபக்ஸ 2022 மே 9 இல் தனது பிரதமர் பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து மக்கள் போராட்டத்தை சமாளிக்க 2022 மே 12 அன்று ரணில் விக்கிரமசிங்கவை கோத்தபாய ராஜபக்ஸ பிரதமராக நியமித்தார்.

**(தொடர்ச்சி 21 பக்கம்)**

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் பலம் நிறைந்த அமைப்பின் "கருப்பொருளை" நாசம் செய்யும் வகையில் கனடாவில் செயற்படும் அதன் தேர்தல் அலுவலர்கள்...

## முன்னாள் அமைச்சரும் அமைப்பின் தீவிர செயற்பாட்டாரும் கனடிய கணக்காளருமான நிமால் விநாயகமூர்த்தியின் வேட்பு மனு நிராகரிப்பு கனடாவில் தோன்றியுள்ள "எழுச்சியை" மழுங்கடிக்கும் வகையில் "பதவி ஆசை" கொண்டவர்கள் அரங்கேற்றும் பழிவாங்கல்கள்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் பலம் நிறைந்த அமைப்பு 2010ம் நிறுவப்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் வீழ்ச்சிக்குப் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்கான குரல் கொடுக்கும் வகையில் தோற்றுவிக்கப்பெற்ற அற்புதமான "கருப்பொருளை" தங்கள் கைகளில் எடுத்து செயற்படும் வகையில் உலகின் பல நாடுகளில் வாழும் பலரும் இயங்கிவருகின்றார்கள்.

நாடு கடந்த அரசாங்கத்தின் 4வது பாராளுமன்றத்திற்கான அரசவை உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் எதிர்வரும் மே மாதம் 5ம் திகதியன்று உலகின் தமிழர்கள் வாழும் நாடுகள் பலவற்றில் தேர்தல் நடைபெறவுள்ளது.

கனடாவிலும் இந்த தேர்தல் சிறப்பாகவும் ஜனநாயக முறையிலும் நேர்மையாக நடத்தப்பெற்று சிறப்பாகச் செயற்படும் சுமார் 25 அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த தேர்தலிலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திலும் தீவிரமாக செயற்படும் வகையில் பலர் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

இந்த வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் கனடிய கணக்காளரும், தீவிரமான செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தி மற்றும் பலர் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் செயற்பாட்டு அமைப்பில் பலரையும் இணைத்து அதனை ஒரு பலமுள்ள அமைப்பாக கனடாவில் வளர்த்தெடுக்க கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்கள் பொருள் மற்றும் நேரம் அனைத்தையும் அர்ப்பணித்து இயங்கிவருகின்றார்கள்.

நாடுகடந்த அரசாங்கத்தில் பலரையுயும் இணைத்து அதனை ஒரு பலமுள்ள அமைப்பாக கனடாவில் செயற்படும் வகையில் அதிகளவு அங்கத்தவர்களையும் பொது மக்களையும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் வகையில் மக்கள் மத்தியில் பணியாற்றத் தொடங்கினார்கள்.

இதனால் கனடாவில் மக்கள் விரும்பும் ஒரு அமைப்பாக நாடு கடந்த அரசாங்கம் மாற்றம் பெற்று வரும் நிலையில் அதை "நாசம்" செய்யும் வகையில் கனடாவில் தான்தோன்றித்தனமாக செயற்படும் அதன் தேர்தல் அலுவலர்கள் தங்கள் "கைவரிசையை" காட்டத் தொடங்கியுள்ளார்கள்.

இவ்வாறான "நாசகார" செயற்பாடுகளை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டுள்ள சிலர் முன்னாள் அமைச்சரும் அமைப்பின் தீவிர செயற்பாட்டாரும் கனடிய கணக்காளருமான நிமால் விநாயகமூர்த்தியின் வேட்பு மனுவை நிராகரிப்பதாக அறிவித்துள்ளார்கள். இதனால் கனடா வாழ் அரசியல் ஆர்வலர்கள் பலர் இந்த அநியாயமான நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

கனடாவில் தோன்றியுள்ள "எழுச்சியை" மழுங்கடிக்கும் வகையில் "பதவி ஆசை" கொண்டவர்கள் அரங்கேற்றும் பழிவாங்கல்கள் என்றே இந்த விடயத்தை அவர்கள் கருதுகின்றார்கள்.

கனடாவில் தோன்றியுள்ள எழுச்சியானது எதிர்காலத்தில் நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளைகளை அதிகரிக்கச்செய்யும் என்றும் கனடாவில் மக்கள் ஆதரவு இந்த அமைப்பிற்கு பெருகும் என்ற வகையில் "பதவி ஆசை" கொண்ட சில "விசமிகள்" இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள் என அறியப்படுகின்றது.



அத்துடன் அவர்கள் கனடாவில் ஒரு குடையின் கீழ் இயங்கிவரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள பலரையும் தடுத்து நிறுத்தும் வகையிலும் செயற்பட்டு வருகின்றார்கள் என்றும்இதனால் புதிதாக இணைந்துள்ள பலரது விண்ணப்பங்களையும் வேட்பு மனுக்களையும் நிராகரிப்பது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது எனவும் பல அன்பர்கள் அறியத்தந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் திரு. நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தனக்கு எதிராக நியாயமற்ற முறையில் நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு சட்ட ரீதியாக நியாயம் தேடும் வகையில் ஈடுபட்டுள்ளார் எனவும் அறியப்படுகின்றது.







# மரண அறிவித்தல்

தோற்றம்:

06
-
12
-
1944



மறைவு:

12
-
04
-
2024

# திரு. நாகமணி மகேந்திரன்

(முன்னாள் தலவாக்கலை பாமஸ்டன் குரூப் மற்றும் இறக்குவானை ஸ்பிரிங்வூட் குரூப் பெருந்தோட்ட தலைமை எழுதுனர்)

**பதுளையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், தலவாக்கலை, இறக்குவானை மற்றும் ஜா-எல ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திரு. நாகமணி மகேந்திரன் அவர்கள் 12-04-2024 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதியின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லாச்சி தம்பதியின் பாசமிகு மருமகனும்,
காலஞ்சென்ற தங்கமலர் அவர்களின் அன்புக் கணவரும்,
மகாலெட்சுமி (கனடா), தேவதாஸ் (பேர்லின் - ஜெர்மனி), லோகேந்திரலிங்கம் (கனடா), சிவராமன் (வவுனியா) ஆகியோரின் மூத்த சகோதரரும்,
பிரதீபன் (DFCC BANK), சஞ்சுதா (Shakthi TV) ஆகியோரின் அன்புத் தந்தையும்,
ஜசங்கி (Seylan Bank), கிருஷாந்த (Shakthi TV), ஆகியோரின் அன்பு மாமனாரும்,
திலண்யா, திவேன் தேஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும்,
காலஞ்சென்ற இலட்சுமணசாமி, மற்றும் சாவித்திரி (பேர்லின்), பத்மலோஜினி (கனடா), செந்தில்மணி (வவுனியா), சண்முகநாதன் மகேஷ்வரி, தனலட்சுமி மற்றும் கனகமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-04-2024 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஜா-எல நகரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஜா-எல கப்புவத்த மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொலைபேசி இலக்கங்கள்:**
**மா. பிரதீபன் (மகன்): 0776203599 அல்லது 0742199585**
**கி. சஞ்சுதா (மகள்): 0711642231 அல்லது 0779157007**

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

### எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்





வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகினறது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

### இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

# Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

## Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

## Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

## Contact US


Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

**Durham Tamil Association**

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




## Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca

# Volunteers Needed!

## தன்னலவாளர்கள் தேவை!




Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!

Volunteer Gala : Twice a Year!

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

**சித்திரை வருடப்பிறப்பு**

**சிறப்பாக நடைபெறவுள்ளது**



மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 13-04-2024 சனிக்கிழமை காலை 8:00 தொடக்கம் பூசைக்கள் அரம்பமாகி 10:44க்கு வருடம்பிறக்கும் நேரம் சிறப்பு ஆராதனை நடைற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

23-04-2024 செய்வாய்க்கிழமை காலை 8:00 மணிமுதல் சித்திரா பௌர்ணமி பூசை சிறப்புடன் நடைபெறும்.

அன்னையின் அருள்வேண்டி செழிப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன கொடுத்துதவலாம்.

80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario

(416) 436-9647


# தமிழ்ப் பொது வேட்பாளர்: தேவையா?

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

(10ம் பக்கத் தொடர்ச்சி) தூங்கிக்கொண்டா இருக்கிறது? அப்படி என்றால் விகாரைகளைக் கட்டுவதும் தமிழ் மரபுரிமைச் சின்னங்களை ஆக்கிரமிப்பதும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பது யார்? அவர்களை யார் இயக்குகிறார்கள்?

சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் கோபித்துக் கொள்ளும் அல்லது அது தன்னை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் என்று பயப்பட்டால் தமிழ் மக்கள் எதிர்ப்பு அரசியலையே கையில் எடுக்கக் கூடாது. தமிழ் தேசியம் என்ற வார்த்தையெல்லாம் பயன்படுத்தக் கூடாது. போராட்டம் சுதந்திரம் என்றெல்லாம் பிரகடனங்களைச் செய்யக்கூடாது.

நாலாவது காரணம், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துகிறவர்கள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரோடு டீல் செய்ய விரும்புகிறார்கள் என்ற சந்தேகம். இருக்கலாம். அதற்கு வாய்ப்புகள் உண்டு. அதேநேரம் அது தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் என்ன என்பதில்தான் தங்கி இருக்கின்றது. ஏனென்றால் தமிழ் பொது வேட்பாளரோடு ஏதோ ஒரு டீலுக்கு வரும் சிங்கள வேட்பாளர் சிங்கள பௌத்த வாக்குகளை இழக்க வேண்டிவரும் என்பதே இலங்கைத் தீவின் கள யதார்த்தமாகும். சரத் பொன்சேகாவுக்கு அதுதான் நடந்தது. மைத்திரிக்கு அது நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சம்பந்தர் மையால் உடன்படிக்கை எழுதுவதற்கு பதிலாக இதயங்களுக்கு இடையில் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் இலக்கியத்தனமாகப் பேசினார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் உச்சமான கோரிக்கையை முன் வைத்தால், அவருடன் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் பேரம் பேச வர மாட்டார் என்பதே யதார்த்தம். எனவே தமிழ்ப் பொது வேட்பாளர் முன்வைக்கப் போகும் கோரிக்கைகள் எவை என்பதுதான் அதைத் தீர்மானிக்கின்றது.

ஐந்தாவது காரணம், எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்ப முடியாது. எனவே தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது. உண்மை. எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்பக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்வைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்படுகிறது. 15 ஆண்டுகளாக தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கப்பட்டன. அதை நிறுத்தி அதை தமிழ் வேட்பாளருக்கு உரியதாகத் திரும்பினால் என்ன?

எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப நான் கூறுவது போல, பகிஸ்கரிப்பு ஒரு தெரிவுதான் இந்தியாவில் நோட்டா என்று தெரிவு உண்டு. அதைப் போல. ஆனால் அந்த தெரிவை முன்வைக்கும் ஒரு கட்சி அதற்காக உழைக்க வேண்டும். அந்த தெரிவை மக்கள் மயப்படுத்த வேண்டும். அறிக்கையை விட்டுவிட்டு பேசாமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் ஏனைய கட்சிகள் மக்களைப் பிழையான வேட்பாளரை நோக்கிச் சாய்த்து கொண்டு சென்று விடுவார்கள். அதாவது தமிழ் வாக்குகள் மீண்டும் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கிப் போகும்.

தேர்தலைப் புறக்கணிப்பது ஒரு தெரிவு. ஆனால் அதற்காக உழைக்க வேண்டும். அதை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதுதான் சுதந்திரத்திற்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் செய்ய வேண்டியது.

மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது தக்கபூர்வமாகத் தெளிவாகத் தெரிகிறது, தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுபவர் தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையின் குறியீடாக இருக்க வேண்டும். அவர் தமிழ்க் கட்சி அரசியலைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் தற்போது தூண்டி விடப்படும் பிரதேச, சாதி, சமய, பால் அசமத்துவங்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது. எந்த ஒரு சிங்கள வேட்பாளரோடும் அவர் தன்னிச்சையாக டீலுக்கு போக முடியாது. ஜனாதிபதித் தேர்தல் மூலம் அவருக்கு கிடைத்த பிரபல்யத்தை அவர் அடுத்தடுத்த தேர்தல்களில் முதலீடு செய்யக்கூடாது.... போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை தமிழ் மக்கள் முன் நிறுத்துவார்களாக இருந்தால், அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்குரிய கட்டமைப்புகளை தமிழ் மக்கள் உருவாக்க முடிந்தால், அது கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியலில் திருப்பகரமான ஒரு நகர்வாக அமையும்.





பிராம்ப்டன் பூங்காக்களில் தூய்மைப்பணி செய்தல்

ஏப்ரல் 1 முதல் நவம்பர் 1 வரை

பிராம்ப்டன் நகரைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருக்க உதவுங்கள். நமது பல பூங்காக்களில் ஒன்றில் சமுதாய உந்துதல் அல்லது சுய உந்துதலின் பேரில் தூய்மைப்பணி மேற்கொள்ள பதிவு செய்யுங்கள்

பூங்காக்களில் தூய்மைப்பணி, மின்சாதனக் கழிவுகள் சேகரித்தல் மற்றும் பிபிக்யூ (BBQ)

ஏப்ரல் 20 கோர் மெடோஸ் பூங்கா
ஏப்ரல் 27 டுக்கன் (Duggan) பூங்கா
மே 4 கிரெடிட்வியூ சாண்டல்வுட் பூங்கா
மே 11 ஏர்ன்ஸ்க்ளிஃப் பூங்கா
மே 25 சூஸன் ஃபென்னல்/ஃப்ளெட்ச்சர்ஸ் க்ரீன் பார்க்

சமுதாயத் தூய்மைப்பணிகளில் ஈடுபடுவதற்காக, உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தன்னார்வத்தொண்டு செய்வதற்கான நேரம் அனுமதிக்கப்படும். மின்சாதனக் கழிவு சேகரிப்பு லெட்ஸ் கோ டுகெதர் (Let's Get Together) அமைப்புடன் சேர்ந்து உபசரிக்கப்படும்.

தூய்மைப்பணி நிகழ்ச்சிகள் பற்றிய பட்டியலுக்கு மற்றும் பதிவு செய்து கொள்வதற்கு, வருகை புரியவும்: **brampton.ca/cleanup**

BRAMPTON

# "மலையக தமிழ் இலக்கியம்" மலையகா சிறப்பிதழும்

## - சிறப்புரை வி.தேவராஜ் -



**கனடாவில் கடந்த கால்நூற்றாண்டுக்கு மேலாக இயங்கிவரும் "தேடகம்" அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற "மலையகப் பெண்களின் கதைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா 14-04-2024 அன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மலையகப் பெண்களின் கதைகள் மேற்படி விழாவில் எழுத்தாளர்கள் அன்பு, யாழினி, நிருபா, மற்றும் மீரா பாரதி ஆகியோரும் உரையாற்றினார்கள்.**

**வீரகேசரிப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ. தேவராஜ் சிறப்புரையாற்றினார். எழுத்தாளரும் பேராசிரியையுமான கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய வீ தேவராஜ் அவர்களின் உரையின் முழுவடிவம் இங்கு இரண்டு பகுதிகளாக பிரசுரமாகின்றது.**

"மலையகா" என்ற பெயர்

"இன்றைய இந்த வெளியீட்டு விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள சிறு கதைத் தொகுப்புக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் குறித்து என்னுள் எழுந்துள்ள வினாவினை அவையின் முன் வைக்கின்றேன்.

இந்த நூலுக்கு "மலையகா" என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்று புரியவில்லை.

இன்று இலங்கையில் மலையக மக்களின் இன அடையாளம் குறித்து பெரிதாகப் பேசப்படுகின்றது. தற்பொழுது இன அடையாளம் குறித்த கருத்தாடல்கள் சூடு பிடித்துள்ள இன்றைய நிலையில் "மலையகா" என்ற புதிய இன அடையாளத்துடன் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

"மலையகா" என்பது இடப்பெயராகவா? அல்லது இனத்துவத்தை குறிக்கும் பெயராகவா? சூட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

மலையகத் தமிழ் இலக்கியம்

இன்றைய இந்த நிகழ்வில் "மலையகத் தமிழ் இலக்கியம்" என்ற தலைப்பில் உரையாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளேன்.

மலையக இலக்கிய குறித்து முழுமையாக நான் பேசப் போவதில்லை. மலையகத்தின் எனது அனுபவம் பேசப்படாத மலையக இலக்கிய செல்நெறி குறித்து பேசுவதாகவே எனது இந்த உரை அமையும்.

அந்தவகையில் மலையக இலக்கியம் என்பது 200 வருடகால மலையக மக்களின் வாழ்வியலில் அந்த மக்கள் முகம் கொடுத்த இரு நூற்றாண்டின் அதாவது 20 தசாப்தகால துன்பியலின் வரலாராகும். காலனித்தவத்தின் கோர முகத்தையும் அதன் அடக்கு ஒடுக்கு முறைகளையும் மீறி பிரசவித்ததே மலையக இலக்கியமாகும்.

"மலையகம் 200"

"மலையகம் 200" இன் ஒரு அடையாளமாக இன்றைய இந்த நிகழ்வூ அமைந்துள்ளது.

"மலையகம் 200" இன் நிகழ்வுகள் காலனித்தவத்தின் பிடியில் இருந்து மலையகம் விடுதலையான சுதந்திர நிகழ்வோ என இன்று பலர் கருதலாம். உண்மையில் "மலையகம் 200" மலையகத்தின் விடுதலையைப் பறைசாற்றும் நிகழ்வு அல்ல.

ஏனெனில் இன்றும் மலையகமக்கள் அரகாலனித்துவகட்டமைப்புக்களுடனும் அதனுடன் இரட்டைச்சகோதரனாக இணைந்துள்ள இனவாத தீ சுவாலைகளுக்குள்ளும் பயணிக்கின்றனர் என்பதை இங்கு பதிவிட விரும்புகின்றேன்.

அன்று வெள்ளைத் தோல் துரைத்தனததிற்குள் சிக்கி இருந்த மலையகம் இன்று கறுத்த தோல் துரைத்தனத்திற்குள்ளும் அதனுடன் இணைந்து பயணிக்கின்ற இனவாதத் தீ நாக்குகளுக்குள்ளும் சிக்கிக் கிடக்கின்றது. அந்தவகையில் 1.5 மில்லியன் மலையக மக்களின் தலை விதி தீர்க்கமான இன்னொரு கட்டத்திற்குள் நுழைய உள்ளது என்று கூறுவதே பொருந்தும்.

மலையக அரசியல்வாதிகள் தமது அரசியல் நலன்களுக்காக பேச மறுக்கின்ற அல்லது மூடி மறைக்கின்ற மலையகம் நோக்கிய ஒரு பெரிய ஆபத்தை இன்றைய இளம் கவிஞாகள் பேசுகின்றனர்.

அதற்கு உதாரணமாக ஏப்ரல் மாத வெளியீடாக வந்துள்ள "தாய் வீடு" இதழில் மல்லிகைப்பூச்சந்தி திலகர் எழுதியூள்ள கட்டுரையில் இருந்து உதாரணத்தைக் காட்ட முடியூம்.

"மலையகத்திற்கோர் மனு" என்ற தலைப்பில் இரத்தினபுரி மாவட்டைத்தைச் சேர்ந்த காவத்தை கிருபா வின் கவிதை இவ்வாறு பேசுகின்றது.

"......இன்றோ....
கருக்கலைப்பிலோர்
இனவழிப்பு
தமிழன் மட்டுமா?
தமிழும்தான்"...

என்ற இந்த வரிகள் "மலையகம் 200" இன் அடுத்த சவாலாக இருக்கப் போகின்றது.



இன்னும் ஒரு இளந் தலைமுறையினைச் சேர்ந்த கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை சார்ந்த இரா. சுலக்ஷனா தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்.

- 1961 ஆம் ஆண்டு தினகரன் இதழில் பிரசுரமாகிய ஒரு கூடைக் கொழுந்து, கால மாற்றத்திற்கு ஏற்ப சமுக மாற்றங்கள் நிகழாத, மலையக மக்கள் அவர்தம் வாழ்வியலின் குறியீடாக அமைந்து, இற்றைவரை அவர்தம் வாழ்வியலில் நிலவும் நிலையை, அச்சொட்டாகப் பிரதிபலித்துகாட்டுகிறது.

"மாற்றமின்றித் தொடரும் மலையகத்தின் மாற்றத்தை" நோக்கிய குரலாகவே காவத்தை கிருபா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக இரா. சுலக்ஷனா போன்ரோரது குரல்கள் அமைந்துள்ளன.

மறைந்த ராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களின் தீர்க்கதரிசனம்.

2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின் அவ்வேளையயில் மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த மறைந்த ராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களை வீரகேசரிக்காக நேர்காணல் செய்த போது "முள்ளிவாய்க்கால் பேரழிவைவிட மிக மோசமான பேரழிவை தமிழ் மக்கள் இனிவரும் காலங்களில் சந்திக்க உள்ளனர்" என்று தெரிவித்தார். அது தற்போது நிதர்சனமாகியுள்ளது. இதே பாதைக்குள் மலையகமும் "மலையகம் 200" நிகழ்வுகளுடன் பிரவேசிக்க உள்ளது என்பதை இன்றைய இந்த நிகழ்வில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இந்த ஒரு பின்னணியுடன் எனது தலைப்புக்கள் நுழைகின்றேன்.

1823 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருந்து மலையகம் நோக்கிய குடிப் பெயர்வு.

1823 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருந்து இலங்கை நோக்கி பெருந்தோட்டப் பொருளாதார எழுச்சிக்கும் வளர்ச்சிக்குமாக தமிழ் மக்கள் அழைத்து வரப்பட்ட காலகட்டத்துடன் மலையக இலக்கியம் ஆரம்பிபிக்கின்றது.

1823 ஆம் ஆண்டில் இலங்கையில் காலடி எடுத்து வைத்த தமிழக மக்கள் தமக்கு வழங்கப்பட்ட ஆசை வார்த்தைகளும் வாக்குறுதிகளும் தமக்கு சுபீட்சத்தையும் வளமான வாழ்வையூம் வழங்கும் என்ற எதிர் பார்ப்புடனேயே இலங்கைத் தீவில் வந்திறங்கினர்.

ஆனால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் ஆசை வார்த்தைகளும் தாம் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்த போதே கடலுக்குள் வீசப்பட்டதை உணர்ந்தனர். எனவே இந்த இரு நூற்றாண்டு கால மலையக இலக்கியம் 1823 ஆண்டுடன் ஆரம்பிக்கின்றது என்ற எடுகோல் முன் வைக்கப்படுகின்றது.

கண்டி மன்னரான சிறி விக்ரம ராஜசிங்கன் காலத்தில் தமிழ் இலக்கிய பாரம்பரியம் ஒன்று இருந்துள்ளது. இதனை மலையக இலக்கிய கர்த்தாக்களில் முக்கியமானவரும் மலையக இலக்கிய ஆய்வாளருமான சாரல்நாடன் மலையக இலக்கிய வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

- இலங்கை மண்ணில் 19ஆம் நூற்றாண்டில் தொடங்கிய தோட்டப்புற வாழ்க்கையும் அதற்கு முற்பட்ட கண்டி மன்னன் காலத்தினதும் கருவாப்பட்டைக் காலத்தினதும் வாழ்க்கையில் எழுந்த இலக்கிய வடிவங்கள் காணக்கிடைக்கவில்லை என்று சாரல்நாடன் தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

- இந்த உண்மையால்தான் இன்று அவைகளைத் தேடிக் கொள்வதில் சிரமப்படுகின்றோம். இலங்கையில் கடைசி மன்னனாகக் கொள்ளப்படும் ராஜசிங்கன் பற்றிய அக்கறையோ அவர் காலத்துக் காவியமான "சின்ன முத்து" கதை குறித்த அக்கறையோ நமக்கு இல்லாததால் அந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பறி கொடுத்து விட்டோம். இதனை தனியார் நூலகங்களிலும் விகாரைகளிலும் சுவடித் திணைக்களங்களிலும் தேடி அலைகின்றோம் என கூறுகின்றார்.

- உண்மையில் கடைசி கண்டி அரசன் 1815 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட போது அவரும் அவருடைய குடும்பமும் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டனர். என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் அவரது பரம்பரையினர் தமிழர்களாகவும் சிங்களவர்களாகவும் குருநாகல பகுதியை அண்டிய பிரதேசங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். கடைசி கண்டி மன்னனனின் நினைவு தினத்தை இன்றும் அவர்கள் ஒன்று கூடி அநுஸ்டித்து வருகின்றனர். இந்தப் பரம்பரையைச் சேர்ந்த ரமேஸ் என்ற சுதந்திர ஊடகவியலாளர் கடந்த வருடம் காலமானார். இந்தக் குடும்பங்களுடன் தொடர்பு கொண்டால் பல தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

அடுத்ததாக தமிழக இலக்கிய பாரம்பரியத்துடன் தமது இலக்கிய உறவு மற்றும் பிணைப்பு பற்றிப் பேசுவது. இந்த உறவு மலையக மக்களின் இரத்தத்துடன் கலந்துவிட்ட உணர்வு பூர்வமான விடயமாகும்.

அதே வேளையில் இலங்கையில் இலங்கைத் தமிழர்களை மையமாகக் கொண்டு செழுமையான தமிழ் இலக்கிய பாரம்பரியம் உள்ளது.

ஆனால் இந்த இலக்கிய பாரம்பரியங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில்தான் மலையக இலக்கியம் தோற்றம் பெற்றுள்ளது.

மொத்தத்தில் கூறுவதாயின் மலையக இலக்கியம் என்பது மலையகத்துக்கே உரிய தனித்துவமான இலக்கியப் பாரம்பரியமாக பர்ணமித்ததுள்ளது.

கடைசி கண்டி மன்னர் காலத்து இலக்கியத்துடன் மலையக இலக்கியம் தொடர்புபட்டதல்ல. ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தில் இருந்தும் மலையக இலக்கியம் வேறுபட்டது.

அது போல் தமிழக பாரம்பரிய பண்பாட்டு உணர்வுகள் மக்களின் மனங்களில் இருந்த போதும் மலையக இலக்கியம் தானே பாதை வெட்டி தனித்துவமாகப் பயணிக்கத் தொடங்கியதே மலையக இலக்கியமாகும்.

பிரதேச இலக்கியமாகவே நோக்கப்பட்டது.

எனினும் ஈழத்து இலக்கியப் பரப்பில் மலையக இலக்கியம் அண்மைக் காலம் வரை பிரதேச இலக்கியம் என்ற வரையரைக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தது. தற்போதுதான் இந்த நிலை மாற்றத்துக்குள்ளாகி ஈழத்து தமிழ் தேசிய இலக்கியத்தின் ஒரு அங்கமாக மலையக இலக்கியம் நோக்கப்படுகின்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி

எனவேதான் பேராசிரியர் கா. சிவத்தம்பி சேர் அவர்கள் "மலையக இலக்கியம் என்பது தமிழ் இலக்கியத்தின் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ள அதே சமயம் ஈழத்து தமிழ் இலக்கியத்தின் பிரிக்க முடியாத மிக முக்கிய கூறாகவும் அமைந்து காணப்படுகின்றது" என்று குறிப்பிடும் அவர் "மலையக இலக்கியத்தினை புறக்கணித்தோ அல்லது ஒதுக்கி விட்டோ ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றை எழுத முனைவது பூரணத்துவமுடைய வரலாறு எழுதும் முயற்சியாக அமையாது" என்று பதிவிட்டுள்ளார்.

**(தொடர்ச்சி 20 பக்கம்)**

# ஆறாத வலி
# புலம் பெயர்ந்த தேசம் ஒன்றிலிருந்து மிதியா கானவி

(“கனடா உதயனு”க்கான சிறப்புக் கட்டுரை)



இறுதிக்கட்டப் போரின்போது ஒவ்வொரு இடமாக மக்களுடன் சேர்ந்து மருத்துவ மனைகளும் இடம் பெயர்ந்தன. அந்த இடப்பெயர்வின் இறுதி இடம் தான் முள்ளிவாய்க்கால்.

பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து அனேக மருத்த உபகரணங்களையும் இழந்து வன்னிப் போரின் இறுதி நாட்களிலும் முள்ளிவாய்க்கால் கனிஸ்ர உயர்தர பாடசாலையில் இயங்கிக்கொண்டிருந்த மருத்துவமனை அது.

அங்கு மண் போட்டால் மண் விழாத அளவிற்கு நோயாளிகள் நிறைந்து வழிந்தனர்.

ஆனாலும் அதனை சமாளிக்கும் அளவிற்கு மருத்துவ ஊழியர்களோ, வைத்தியர்களோ. மருந்துகளோ இருக்கவில்லை பீரங்கி வாயினில் புறா கூண்டினைக் கட்டி குடிபுகுந்து வாழ்வதைப் போலவே மருத்துவமனையின் சூழலும் இருந்தது.

மருத்துவமனையின் அமைதி காணாமல் போயிருந்தது மக்களின் அலறல் ஒலிகள் காதைப் பிய்த்துக் கொண்டிருந்தன. அந்த சோகத் தணல் பீரங்கி வேட்டுக்களை விட மோசமாக மனதைத் தாக்கியது.

அன்றும் நோயாளிகளை அனுமதிக்கும் பகுதியில் அதிக மக்கள் காயமடைந்து கொண்டு வரப்பட்டுள்ளார்கள். சத்திர சிகிச்சை அறையை விட்டு வெளியில் வருகிருகின்றோம் தறப்பாளினால் போடப்பட்டும், சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டும். கிடந்த நோயாளர்களை அனுமதிக்கும் பகுதியில் வயது வேறுபாடின்றி கூக்குரல் இடுகின்றனர்கள். “இங்க வாங்க அம்மாவை பாருங்க, என்ர தம்பியை பாருங்க” இப்படி பல குரல்கள் நடுத்தர வயது மதிக்கத்தக்க தாயொருவர் வயிற்றில் காயத்துடன் குடல்கள் வெளியில் தெரிய போடப்பட்டிருந்தாள்; காயமடைந்த பலரையும் தாண்டி அந்த தாயின் நிலமை மோசமாக இருக்கும் என எண்ணியவாறு அங்காங்கே கிடந்த இறந்தவர்களின் உடலையும் தாண்டி அருகில் செல்கின்றோம். இறந்தவர்களின் உடலைக் கூட அகற்ற முடியாத சூழல். வெடியோசைகள் இடைவெளியற்று தொடர்ந்து கொண்டிருந்தன. யாரின் உயிரிற்கும் உத்தரவாதம் இருக்கவில்லை.

காயமடைந்திருந்த அம்மா “என்ர பிள்ளை பிள்ளை” என்றே முனகிக்கொண்டிருந்தாள். குருதி அதிகளவு வெளியேறி உடம்பு கண்டி சிவந்திருந்தது. கை கால் குளிர்ந்து நடுங்கியது. மார்பை மறைக்க ஓர் கிழிந்த சட்டையும் உட்பாவாடையும் அணிந்திருந்தாள். கைகளில் மட்டும் ஒரு சிறிய படம் வைத்து இறுகப்பற்றியிருந்தாள். அதை என்னிடம் காட்டி ஏதோ சொல்ல துடித்தாள். முடியவில்லை. உடல் பலம் இழந்திருந்தது. எவ்வளவோ கத்த முயற்சித்தும் குரல் வெளியே ஒலிக்கவில்லை.

அந்த அம்மாவின் குருதியை இரத்த வங்கிக்கு பரிசோதனைக்காக அனுப்பிவிட்டு வேகமானோம். மாமரக் கொப்பொன்றில் சேலைன் பொத்தலைக் தொங்க விட்டு நாளத்திரவங்களை (IV fluid) வேகமாக ஏற்றி கொண்டிருக்க. மெல்ல மெல்ல அம்மாவும் மீண்டும் உயிர் பெறத் தொடங்கினாள்.. முனகிக்கொண்டிருந்த அம்மாவிற்கு சற்று உடலில் தென்பு வர “தங்கச்சி எனக்கு பக்கத்தில் முத்த பிள்ளையின் உடல் சிதறிட்டு என்ர மூன்று வயது பிள்ளையைக்காணவில்லை நான் காயப்பட்டவுடன் ஆரோ என்னை இங்கு கொண்டு வந்திட்டாங்கள்” என அம்மா பல முறை கூறினாள். ஆனாலும் அவளிற்கு ஆறுதல் கூற அங்கு யாரும் இருக்கவில்லை. எல்லோருமே அந்த நிலைமை தான். நின்று கதைக்க முடியவில்லை உயிருக்கு போராடும் மற்றவர்களை காப்பாற்ற வேண்டியிருந்தது. எல்லா இடங்களிலும் இதே ஓலம் தான்.

அம்மாவை சத்திர சிகிச்சை கூடத்திற்கு கொண்டு செல்ல முனைந்த போது அம்மா வர மறுத்தாள். ஏன்ர பிள்ளை வந்தால் தான் நான் வருவேன் என்று அம்மா கெஞ்சினாள்.

அப்போது சூரியன் உச்சத்தை தொட்டிருக்கவேண்டும் வெட்பம் எம்மை அனுகவேயில்லை பல நூறு மக்களின் கண்ணீராலும், செங்குருதியாலும் மருத்துவமனை இயங்கிய இடம் நனைந்துகொண்டிருந்தது.

படார் என்ற சத்தத்துடன் விழுந்த எறிகணையால் அந்த இடமே புகை மண்டலமாகியது கண்களை மூடிக்கொண்டு விழுந்து படுக்கவும் அவகாசம் கிடைக்கவில்லை. இந்த சத்ததுடன் எம்முடன் ஒன்றாக மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்த சிலர் காயமடைந்தும் நோயாளிகள் பலரும் மீண்டும் காயமடைந்தார்கள்.



நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு மனம் சின்னாபின்னமாகியிருந்தது. வேதனை கோபம் உணர்ச்சிகள் ததும்ப கண்களில் வழிந்த நீரை துடைத்து கொண்டு மீண்டும் எம் கடமைக்குத்தயாரானோம்.

அம்மாவின் சேலைன் போத்தலில் இருந்த சேலைனும் நிலத்தில் ஊற்றியது. நிமிர்ந்து பார்த்த போது தான் தெரிந்தது சேலைன் போத்தலும் காயப்பட்டிருந்தது.

நள்ளிரவைத்தாண்டியும் சத்திர சிகிச்சைக்கூடம் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. இரவைப் பகலாக்கி உறக்கத்தை தொலைத்து உணவு கூட இன்றி அங்கு நின்ற மருத்துவ ஊழியர்கள் மனித நேயத்துடன் தங்களால் இயன்ற வரை உழைத்ததை யாராலும் மறுக்க முடியாது.

ஒரு சிறிது நேர அமைதியின் பின் மீண்டும் மருத்துவமனையில் ஆரவாரம் மரண ஓலங்கள் தொடர்ந்தன; அய்யா அய்யா அது என்ன அநியாயம் ஓர் பெண் விகாரமாய் தலையிலே கைகளை வைத்தபடி அழுதாள். அவள் அருகில் சிறு காயத்துடன் மருத்துவமனை வந்த சிறுவன் அசைவற்று கிடந்தான். இன்னொருவர் இறந்து போன தன் பச்சிளம் பாலகனை மடியில் வைத்து கதறினார். இன்னும் சிலர் சடலங்களிற்கும் காயப்பட்டவர்களிற்கும் இடையில் தமது உறவுகளை தேடினார்கள்.

அம்மாவிற்கு குடலில் ஈரலில் சிறுநீரகத்தில் பாரிய காயங்கள் இருந்தமையால் சத்திர சிகிச்சையின் பின் அவசர சிகிச்சை விடுதிக்கு அனுப்பப்பட்டாள்.

இரவோடு இரவாக வந்த செய்தியால் கும் இருட்டிலும் மனம் வெளித்தது கொடூரமான அந்த வேளையிருலும் எங்களிற்கு அந்தச் செய்தி தேனாய் இனித்தது “ஐ.சி.ஆர்.சி. யின் கப்பல் வருகுதாம்” ஏத்தனையோ நாட்களாக நோயாளரை ஏற்ற வருவதாக சொல்லி இலகு காத்த கிளி போல ஏமாந்த நாட்களைப் போல்தான் “நாளை வருமோ” என்று மனம் அங்கலாத்தது.மருத்துவமனையில் கூட காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று கொண்டிருந்த போதே மீண்டும் காயமடைந்து இறந்த பரிதாப நிலை எத்தனை கண் முன்னே நடந்தேறியது. அதைவிட மருந்துகளும் முடிவடைந்திருந்தன.



நேரம் அதிகாலை மூன்று மணி மக்கள் சந்தோசமாக வாழ்ந்த அழகிய கிராமத்தில் தான் அந்த மருத்துவமனையிருந்தது ஆனாலும் விடியலை கூற சேவல்கள் இருக்கவில்லை. மாறாக வெடி-யோசைகள் தான் நித்திய பூசையாக முழங்கியது.

கப்பல் வருகின்றது என்ற செய்தி பரவலடைய நான் முந்தி நீ முந்தி என்று அனுமதியைப்பெறுவதற்கு முண்டியடித்தார்கள். ஆனாலும் மூன்றுமாத கால இடைவெளியில் வரும் கப்பலில் அவசர நோயாளர்களை அனுப்புவதற்கே இடம் போதவில்லை மற்றவர்களை எவ்வாறு...

“அம்மா வயிற்றின் உள்ளுறுப்புக்களில் பாரிய காயம் கட்டாயம் மேலதிக சிசிச்சைக்காக கப்பலில் போக வேண்டும்”.

“என்றோம் முறைத்துப்பார்த்த அம்மா இயலாத காயத்துடனும் கட்டிலை விட்டு எழுந்து என்ர பிள்ளை இல்லாம நான் போகமாட்டன் செத்தா பரவாயில்லை” என்றாள் திடமாக.

அம்மாவின் முகத்தைப்பார்க்க உள்ளம் நடுங்கியது.பட்டென நெஞ்சில் வலித்தது பக்கத்தில் இருந்த நோயாளி காலைப்பிடித்து “என் பிள்ளைக்கு இரண்டு காலிலும் முறிவு அந்த அம்மாவின் இடத்திற்கு என்னை அனுப்புங்கோ” என கெஞ்சினார்.

உண்மையிலேயே அந்த நோயாளிக்கும் மேலதிக சிகிச்சை தேவைதான். அதைவிட உயிருக்காக போராடும் பலர் இருக்கிறார்கள். அவர்களிற்கே கப்பலில் இடம் போதாமல் இருந்தமையால் மனங்களைக்கல்லாக்கி ஆறுதல் கூற கூட காலமின்றி அவர்களைக் கடந்து அடுத்த நோயாளியைப்பார்க்கச் செல்கின்றோம். மருத்துவர்களின் ஒவ்வொரு நிமிடத்திலும் ஒவ்வொரு உயிர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலமது.

ஏறிகணைகள், சன்னங்கள் வெடித்துக்கொண்டே இருந்தன. அதற்கு பயந்து பயந்து, பதிந்து, நிமிர்ந்து படுத்த நாட்களெல்லாம் கடந்து போய் இறுதி நாட்களில் விதியிருந்தால் நடக்கும் என்று அந்த சூழலில் இருந்த பெரும்பாலானவர்களின் மனங்களில் பதிந்திருந்த உண்மையாகியது.

நேரம் காலை ஒன்பது ஆகியது. மருத்துவமனை மேலும் பரபரப்பானது. முள்ளிவாய்க்கால் மருத்துவமனையிருந்த இடத்திலிருந்து அம்புலன்ஸ் வண்டியில் கடற்கரை வரையும் நோயாளர்களை ஏற்றச் சென்று பின்னர் சிறிய படகு ஒன்றில் i.cr.cயின் பெரிய கப்பலில் நோயாளர்களை ஏற்றினார்கள். இதற்குள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்திய நோயாளர்கள் படும் வேதனை சொல்லமுடியாது.

முதலில் படுக்கையாளர்களை ஏற்றினார்கள்.

கப்பல் வந்தது என்று தெரிந்தவுடன் இடைவிடாது தொடர்ந்து கடற்கரையை குறிவைத்து ஷெல் தாக்குதல் நடந்தப்பட்டுக் கொண்டேயிருந்தது.

கப்பலில் குறைந்த எண்ணிக்கையான நோயாளர்களை அனுப்பிவைக்க அதைவிட பல மடங்கு காயமடைந்தவர்கள் கொண்டுவரப்பட்டனர்.

மருத்துவமனை நோக்கி தொடர்சியாக இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

2009 ஏப்பிரல் 29 திகதி மாலை சிறிலாங்கவின் கடற்படை மற்றும் தரைப்படையின் கொடூரத்தாக்குதல்கள் முள்ளிவாய்க்கால் கனிஸ்ட உயர்தர வித்தியாலத்தில் தற்காலிகமாக இயங்கிய மருத்துவமனை மீது நடத்தப்பட்டது. பாடசாலை பிரதான கட்டடத்தின் ICU விடுதியாக இயங்கிய மையப்பகுதியிலும் ஒரு எறிகைண விழுந்தது.

இதில் காயமடைந்து மருத்துவ மனையில் இருந்து பல காயமடைந்த மக்கள் மீண்டும் படுகொலை செய்யப்பட்டதுடன். காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மக்கள் மீண்டும் காயமடைந்தனர்.

இந்த கொடூர தாக்குதலில் இன்னும் பலர் தொகையாக கொல்லப்பட்டு இருப்பார்கள்.

ஆனால் அன்று காலை ICU விடுதியில் இல் இருந்த பல நோயாளர்கள் நீண்ட நாள் பின்னர் வந்த ICRC கப்பல் மூலம் மேலதிக சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

அதனால் தான் இறந்தவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவாகவிருந்தது.

அன்று காலை ICRC பிரதிநிதிகள் மூலம் இங்கு மருத்துவ மனை இயங்குகின்றது என்பதை சிறிலாங்க அரசிற்கு தெரியப்படுத்திய பின்னர் இத்தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதன் பின் உயிர்தப்பிய நோயாளர்களுடனும் எஞ்சியிருந்த மருத்துவ உபகரணங்களுடனும் முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலையிலை இருந்த இடத்திற்கு இடம்மாறுகின்றோம் அங்கே ஒரு ஒற்றைக்கட்டிடம் நாம் அங்கு செல்வதற்கு முன்பே காயமடைந்தவர்களை கொண்டுவரத் தொடங்கியிருந்தார்கள். அங்கேயும் எறிகணை வெடிப்பு பூமி இருளாக இருந்தாலும் சீறிவரும் சின்னங்களும் சிதறி வெடிக்கும் குண்டுகளின் தீப்பிளம்புகளும் பூமியின் இருளை விழுங்கி அச்சமூட்டும்.

மே 14,15,16 இந்த நாட்கள் இதயத்தின் இறுதி நாளமும் அறுக்கப்பட்டதாய் அந்தரித்துப் போனோம்.

காயமடைந்தவர்கள் ஒரு புறம் இறந்தவர்களின் உடல்கள் என வேறு பாடற்று மருத்துவமனை இயங்கிய பாடசாலைவளாகம் முழுவதும் நிறைந்து கிடந்தது.

இறந்தவர்களின் உடல்கள் அகற்றப்படாமல் ஈக்கள் மொய்த்து துர்நாற்றம் வீசத்தொடங்கியது.

படுகாயமடைந்தமக்களையும் பிரிந்து எடுக்க முடியாமல் உயிரற்ற உடலின் அருகில் கிடந்தே முனகினார்கள்.

நிமிடத்திற்கு நிமிடம் இறப்புகள் கண்முன்னே நடந்து கொண்டிருந்தன. எம் மால் எதுவும் செய்யமுடியவில்லை ஓரளவு எழுந்து நடக்ககூடியவர்கள் இவ்விடத்தை விட்டுப்போனார்கள்.

முள்ளிவாய்க்கால் அ.த.க பாடசாலையில் இறுதியாக இயங்கிக் கொண்டிருந்த மருத்துவமனையை அண்டிய பகுதிக்கு இராணுவம் வந்து விட உடன் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. உயிரிருந்தும் பிணமாகவே நடந்தோம் நாமும்.

படு காயமடைந்த உறவுகளை தூக்கிக் கொண்டு போகவும் முடியாமல் அந்த இடத்தில் வீட்டிற்று தாங்கள் மட்டும் போகவும் முடியாமல் இரத்த உறவுகள் கதறித் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு நடைபெற்ற துயரச்சம்பவங்கள் எண்ணற்றவை. மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தன. இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது. அதுவும் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கூட உலகம் கண்டிக்கவில்லை.

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

## (இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)
## (பகுதி - 2)



- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

சரித்திரத்தின் வலி போகாது, அதன் வடு மறையாது.

அந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் நான் லண்டனில் எனது வீட்டிற்கு வந்து உறங்கச் செல்ல முயன்றாலும் ஏனோ ஒரு உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது.

முதல் நாள் இரவுப் பணி.

இந்திய நாடாளுமன்ற தேர்தலை ஒட்டி பிபிசி தமிழோசை சிறப்பு ஒலிபரப்புகளை திட்டமிட்டு இரண்டு வாரங்களுக்கு செய்தது. மே 16ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நாள். அன்று நள்ளிரவு அளவில் (இந்திய நேரம்) முடிவுகள் முழுமையாக வெளியாகிவிட்டன. அதையொட்டி 17.5.2009 லண்டன் நேரம் அதிகாலை 2.30 முதல் 2.45 மணி-வரையிலான அந்த ஒலிபரப்பு இந்திய தேர்தலில் வெற்றியை மையப்படுத்தியே இடம்பெற்றது.

அவ்வகையில் அந்த சிறப்பு ஒலிபரப்பில் தேர்தல் முடிவுகள், முக்கியமான தொகுதிகளில் வெற்றிபெற்றவர்கள், தோல்வியடைந்தவர்களின் விவரங்கள் ஆகியவற்றுடன் அடுத்த ஆட்சி அமைப்பு தொடர்பிலான தகவல்களும் இடம்பெற்றன.

இதற்கு அப்பாற்பட்டு அன்றைய அந்த சிறப்பு ஒலிபரப்பில், இந்தியாவில் அடுத்து அமையவுள்ள ஆட்சியும், அதன் ஆட்சியாளர்களும் இலங்கை பிரச்சனையை எவ்வாறு கையாள்வார்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எப்படியாக இருக்கும் என்பது தொடர்பில், புலம்பெயர் தேசம் ஒன்றில் வசிக்கும் மூத்த செய்தியாளர் ஒருவருடன் ஆய்வு ஒன்றை செய்துவிட்டு அதை எனது மேசைக்கு வந்து எடிட்டிங் செய்து கொண்டிருந்தேன்.

நான் யாருடன் உரையாடலை முடித்துவிட்டு எனது இருக்கைக்கு வந்து எடிட்டிங் வேலையை செய்துகொண்டிருந்தேனோ அவரிடமிருந்து சிறிது நேரத்தில் ஒரு அழைப்பு வந்தது. அப்போது லண்டனில் பின்னிரவு நேரம்.

"அண்ணா, நாளை எனது பேட்டி ஒலிபரப்பாகுமா?"

"ஏன்...அதிலென்ன சந்தேகம்"..அதற்கான வேலையைத்தான் நான் செய்துகொண்டிருக்கிறேன்!"

"இதைவிட வேறு முக்கியமான செய்தி வந்துவிட்டால் என்ன செய்வீர்கள்?"

"ஏன்...என்ன!...ஏதேனும் முக்கியமான தகவல் உள்ளதா? இருந்தால் கூறுங்களேன்."

"மஹிந்த அவசரமாக நாடு திரும்புகிறார். அரச அச்சகத்தின் ஊழியர்கள் அனைவரும் உடனடியாக வேலைக்கு வரும்படி பணிக்கப்பட்டுள்ளனர். மஹிந்தவை வாழ்த்தி சுவரொட்டிகள் அச்சடிக்கப்படுவதாக ஒரு தகவல் வந்துள்ளது. அதை நான் உறுதி செய்துகொள்ள முயல்கிறேன். உங்களுக்கு அப்படி ஏதேனும் தகவல் கிடைத்ததா? கிடைத்தால் என்னுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?".

"சரி...நானும் முயல்கிறேன்...அவதானமாக இருக்கிறேன்" என்று கூறிவிட்டு மிகவிரைவாக அதிகாலை ஒலிபரப்பிற்கு வேண்டிய செய்திகளை தயார் செய்யும் அதேவேளை ஓயாமல் தொலைபேசியை சுழற்றிக்கொண்டிருந்தேன் உலகமெங்கும்.

எனது மனதிற்குள் வந்த முதல் கேள்வி. ஜோர்டான் நாட்டிற்கு அரசுமுறை பயணமாக சென்றிருக்கும் மஹிந்த எதற்காக அவசரமாக நாடு திரும்புகிறார்? சரி, ஒரு நாட்டின் ஜனாதிபதி அரச பயணத்தை பாதியில் முடித்துகொண்டு நாடு திரும்புவது புதிதல்ல என்றாலும், எதற்காக அரச அச்சகத்தின் ஊழியர்கள் அவசர அவசரமாக அலுவலகம் வருமாறு அழைக்கப்படுகின்றனர். அவரை வாழ்த்தி சுவரொட்டிகள் அச்சிடப்படுவதாகக் கூறப்படுவது ஏன்? இப்படி பல கேள்விகள் மனதிற்குள் ஓடிக்கொண்டே இருந்தன.

ஒரு செய்தியாளருக்கே உரிய அந்த குறுகுறுப்பு தொடர்ந்த வண்ணமே இருந்தது.

ஏன் இவ்வளவு படபடப்பு மஹிந்தவை தொடர்புகொள்ள முடிந்தால் அவரிடமே நேரில் கேட்டுவிடலாமே என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், ஜோர்டான் நாட்டில் அவரை எங்கே தேடுவது?

தேள் கடித்தவனுக்கு விஷம் ஏறுவது போன்று நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

மனதில் சட்டென்று ஒரு எண்ணம் தோன்ற, பிபிசியின் அரபு மொழி சேவையில் இருக்கும் நண்பர்கள் யாராவது உதவக் கூடுமே என்று எண்ணி அவர்கள் பிரிவுக்கு சென்று உதவுமாறு கோரினேன். சரி, பார்ப்போம் என்ற அவர்கள், "உங்கள் ஜனாதிபதி எங்கு தங்கியிருக்கிறார்?" என்று கேட்டார்கள். அது தெரிந்தால் நான் ஏன் உங்களை சிரமப்படுத்தப் போகிறேன் என்று மனதில் எண்ணியவாறு அதற்குத்தானே உங்கள் உதவியை நாடியிருக்கிறேன் என்று கூற அவர்களும் "டோண்ட் வொறி...லெட்ஸ் ட்ரை" என்றார்கள்.

அடுத்த நிமிடம் ஜோர்டான் தலைநகரான அம்மானிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு அரைமனதுடன் அழைப்பெடுத்தால் எதிர்ப்பார்த்தபடி பதில் ஏதுமில்லை. ஏனெனில் ஜோர்டானில் அப்போது நள்ளிரவு கடந்த நேரம். அடுத்து அங்குள்ள அனைத்து ஐந்து நட்சத்திர ஹொட்டல்களுக்குத் தொலைபேசி அழைப்புகள். இறுதியாக அவரது குழாம் "ஹொலிடே இன்" ஹொட்டலில் தங்கியிருப்பதை அறிந்தோம். இது தெரிந்தவுடன் யாரைத் தொடர்புகொள்வது? ஜனாதிபதியை நேரடியாக அழைக்க முடியுமா என்று சில நிமிடங்கள் சிந்தித்த பிறகு அந்த சமயத்தில் அவருடன் பரவலாக பயணிக்கும் அனு' பல்பிட்டியவும் இம்முறையும் சென்றிருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் அவரது தொலைபேசியில் அழைத்தபோது "யெஸ்" என்ற பதில். நான் யாரென்பதை அறிமுகப்படுத்திக்கொண்டு உரையாடலை ஆரம்பித்தேன்.

"மிஸ்டர் பல்பிட்டிய, ஜனாதிபதி தனது பயணத்தை அவசரமாக பாதியில் நிறுத்திக்கொண்டு நாடு திரும்புவதாக அறிகிறோம். அவ்வாறு செல்கிறீர்களா?"

"ஆம், நாங்கள் பயணத்தை இடைநிறுத்தி நாடு திரும்புகிறோம். அது உண்மைதான்."

"ஏன் முக்கியமான ஒரு உச்சிமாநாட்டிற்கு வந்த இடத்தில் பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு நாடு திரும்புகிறீர்கள்?".

"அதற்கு நான் பதிலளிக்க முடியாது. ஜனாதிபதி அவர்கள் உடனடியாக நாம் நாடு திரும்பலாம் என்றார். அவர் கூறினால் அதன்படி செயற்படுவதான் எங்கள் கடமை. உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்பதால், நாங்களும் சரியென்று அதற்கான ஒழுங்குகளை செய்துகொண்டிருக்கிறோம்."

"சரி, நான் ஜனாதிபதியுடன் ஓரிரு நிமிடங்கள் பேச இயலுமா?"

"நீங்கள் சரியாக ஐந்து நிமிடங்களில் மீண்டும் அழையுங்கள் நான் ஜனாதிபதியிடம் தொலைபேசியை அளிக்கிறேன்".

இந்த பதில் எதிர்ப்பார்ப்பை அதிகரித்தது. உடனடியாக கலையக நிர்வாகியிடம் சென்று ஏற்பாடுகளைச் செய்யுமாறும், மாற்று ஏற்பாடாக மற்றொரு கலையகத்தையும் இணைப்பில் வைத்திருக்குமாறு வேண்டினேன். செய்து தருவதாக பதிலளித்த அவர், மூன்று நிமிடங்களில் அனைத்தும் தயார், நீங்கள் கலையகம் வரலாம் என்றார்.

ஆர்வம் மேலிட, கலையகம் சென்று மீண்டும் அனுஷ பல்பிட்டியவை அழைத்தால் பதிலில்லை.

சற்று ஏமாற்றமாக இருந்தாலும், உடனடியாக அவர்கள் தங்கியிருந்த அந்த ஹொட்டலுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து நண்பர் உதவியுடன் அரபு மொழியில், "நாங்கள் லண்டன் பிபிசியிலிருந்து பேசுகிறோம், இலங்கை ஜனாதிபதியின் பயணக்குழுவில் உள்ள யாரிடமாவது பேச முடியுமா?" என்று கேட்டோம்.

"அவர்கள் அனைவரும் சற்று முன்னர் தான் ஹொட்டலைவிட்டு வெளியேறி விமான நிலையம் சென்றனர்" என்ற பதில் வந்தது.

மீண்டும் மனம் தளராத விக்ரமாதித்தன் கதை போன்று, அடுத்து அம்மான் விமான நிலையத்தை தொடர்புகொண்டு அங்கு யார் மூலமாவது பேச இயலுமா என்று சிந்தித்தோம். எனது அரபு மொழி சேவையில் இருக்கும் நண்பர், அது நல்ல யோசனை, தனக்கு விமான நிலைய உயரதிகாரி ஒருவரைத் தெரியும், அவர் மூலம் முயன்று பார்போம் என்றார்.

நம்பிக்கை மீண்டும் சற்று துளிர் விட்டது.

"நாங்கள் விமான நிலைய அதிகாரியுடன் தொடர்பிலிருந்த அதேவேளை, ஒரு நாட்டின் அதிபர் என்பதால், அதற்கான பாதுகாப்போடு அவர் விமான நிலையத்தின் சிறப்பு அறையில் தங்கவைக்கப்பட்டுள்ளார், இன்னும் சிறிது நேரத்தில் அவர் விமானம் ஏறுகிறார். இப்போது அவரிடம் சென்று எனது தொலைபேசியை அளித்து பேசவைக்கும் சாத்தியங்கள் இல்லை" என்ற பதில் கிடைத்தது.

மீண்டும் அனுஷ பல்பிட்டிய...அழைப்பிற்கு பதிலில்லை...

இனி முயற்சிகள் பலனளிக்காது என்று எண்ணி சற்றே சோர்வுடன் எனது ஆசனத்திற்கு வந்தமர்ந்த நிலையில், அந்த புலம் பெயர்ந்த செய்தியாளரிடமிருந்து மீண்டும் ஒரு அழைப்பு.

"அண்ணா ஏதாவது தகவல் கிடைத்ததா?"

நான் நடந்தவற்றை கூறி முயற்சி பலனளிக்கவில்லை என்று தெரிவித்து அவரிடம் ஏதாவது தகவல் உள்ளதா என்று மீண்டும் வி-னவினேன். தன்னிடம் மேலதிகமாக அந்த சமயத்தில் தகவல் ஏதுமில்லை என்றும் தகவல் கிடைத்தால் பகிர்ந்துகொள்கிறேன் என்றும் கூறினார்.

அந்த அதிகாலை நேரத்தில் சலிப்புகளிற்கு அப்பாற்பட்டு ஒலிபரப்பை முடித்துவிட்டு, அந்த செய்திகளை இணையத்தில் ஏற்றி முடிக்கும் பொது பொழுது புலரும் நேரம் நெருங்கியது. வீட்டிற்கு திரும்புவதற்கு முன்னதாக பிபிசியின் மத்திய செய்தியறைக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் நடந்தவற்றை விளக்கி, நீங்கள் தொடர்ந்து அவதானமாக இருங்கள். நானும் தொடர்பில் இருப்பேன் என்று கூறி இரவுப் பணி முடிந்த நிலையில், காஃபி ஒன்றை அருந்திவிட்டு வீட்டிற்கு கிளம்ப ஆயத்தமானேன்.

அப்போது இலங்கையில் காலை 9 மணி. எமது வவுனியா செய்தியாளர் மாணிக்கவாசகம் மற்றும் மட்டக்களப்புச் செய்தியார் உதயகுமார் ஆகியோரிடம் நடைபெற்ற விடயங்களை பகிர்ந்துகொண்டு, கொழும்பிலிருந்து ஏதாவது முக்கியமான தகவல் இருந்தால் உடனடியாக தெரிவிக்குமாறு வேண்டிக்கொண்டு புறப்பட ஆயத்தமானேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் லண்டன் மாநகரின் சுரங்க ரயில்கள் காலை 05.30 மணிக்கு பிறகே புறப்படும். மீண்டும் மத்திய செய்தியறைக்குச் சென்று சிறு நினைவூட்டலைச் செய்து ரயிலடி நோக்கி நடக்க ஆரம்பித்தாலும், மனது முதல்நாள் நள்ளிரவு தொடக்கம் நடைபெற்ற சம்பவங்களையே அசைபோட்டு கொண்டிருந்தது.



ரயில் நிலையம் வந்ததும் இதே சிந்தனை. எதற்கான மஹிந்த அவசரமாக நாடு திரும்புகிறார்? பன்னாட்டு அழுத்தம் காரணமாக போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்கப் போகிறாரா? அப்படியென்றால் போரின் கோரத்தன்மை ஓரளவு குறையுமா? உயிரிழப்புகள் தடுக்கப்படுமா? அப்படி அவர் செய்ய முற்பட்டால் அதை புலிகள் ஏற்பார்களா? என்று பல வகைகளில் சிந்தனை இருந்ததால், முதல் ரயில் வந்து சென்றதைகூட கவனிக்கவில்லை. பின்னர் அடுத்த ரயிலில் ஏறி 45 நிமிட பயணத்தின் பிறகு வீட்டிற்கு வந்ததும், உடல் சோர்வுடன் மனச்சோர்வும் சேர்ந்து கொண்டது. அப்போது லண்டன் நேரம் காலை சுமார் 6 இருக்கும். இலங்கையில் காலை 10.30. நமது செய்தியாளர்களிடமிருந்தும் எந்த தகவலும் இல்லை.

இரவுப்பணி முடித்து திரும்பினாலும் நித்திரையும் வரவில்லை. நித்திரையை கலைப்பதற்காக சுடுநீரில் ஒரு குளியலைப்போட்டு ஒரு காஃபியையும் அருந்திவிட்டு காத்திருந்தேன்.

லண்டன் நேரம் 7.30 மணி அளவில் எமது செய்தியாளர் இ ருவரும் ஏக காலத்தில் தொலைபேசி அழைப்பெடுத்து, மஹிந்த நாடு திரும்பிவிட்டார், விமானத்திலிருந்து இறங்கியதும் மண்ணை முத்தமிட்டு, "உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நடவடிக்கையை நாங்கள் முடித்துள்ளோம், முற்றாக விடுவிக்கப்பட்ட நாட்டிற்கு நான் இப்போது திரும்பியுள்ளேன்" என்று அறிவித்தார் என்று கூறினார்கள்.

பிறகுதான் தெரிந்தது ஏன் இரவோடு இரவாக அச்சக ஊழியர்கள் அழைக்கப்பட்டு மஹிந்தவை வாழ்த்தியும், கொடிகளையும் தயாரித்து நகர் முழுவதும் ஒட்டினர் என்று.

ஆனால் அந்த அறிவிப்பின் பின்னணியில் இன்னும் வெளிவராத அம்சங்கள் பல இருந்தன. அவை...அடுத்த வாரம்...

**(தொடரும்...)**

# “மலையக தமிழ் இலக்கியம்” மலையகா சிறப்பிதழும்

**- சிறப்புரை வி.தேவராஜ் -**

(17 பக்கம் தொடர்ச்சி)

மலையக இலக்கியம் பற்றிய ஆய்வின் போது காணப்படுகின்ற சிக்கல்கள் பற்றி ஆய்வாளர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

1. மலையக பிரதேச இலக்கியவாதிகள் பற்றி முழுமையான விபரப்பட்டியலோ தகவல்களோ இல்லை.
2. மலையக எழுத்தாளர்களின் படைப்புகளில் அனேகமானவை நூலுரு பெறவில்லை. மூத்த எழுத்தாளர் பலரின் ஆக்கங்கள் கூட இதுவரை நூலுருப் பெறவில்லை.
3. மலையக இலக்கியம் தொடர்பாக சேகரித்து வைத்திருந்த பல ஆக்கங்கள் ஆய்வுகள் என்பன மலையகத்தில் இடம் பெற்ற இனவன்முறைகளின் போது அழிந்து விட்டன.
4. மலையக கலை இலக்கியம் தொடர்பாக சேகரித்து வைத்துள்ள பத்திரிகை துணுக்குகளைத் தேடிப் பெறுவதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன.
5. மலையக படைப்புகள் எழுத்தாளர்களின் விபரங்கள் உள்ளிட்ட ஆவண காப்பகம் ஒன்றில்லை.
6.. மலையக இலக்கிய வரலாறு பற்றிய பூரணத்துவமான ஆய்வு நூல் ஒன்று இதுவரை காலமும் எழுதப் படவில்லை.
7. பேராதெனிய கல்கலைக்கழகத்தில் கலாநிதி துரைமனோகரன் கலாநிதி அருணாசலம் போன்ற விரிவுரையாளர்களின் ஊக்குவிப்பாலும் வழிகாட்டுதலிலும் மாணவர்கள் தமது பட்டப்படிப்புக்காக மலையக இலக்கியம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாக அறிகின்றேன். இத்தகைய ஆய்வுகள் நூலுருப் பெறவேண்டும் அல்லது இந்த ஆய்வுகள் குறித்த தகவல்கள் வெளிக் கொண்டுவரப்படல் வேண்டும்.

தமிழக கிராமங்களை மலையகத்தில் காணலாம்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான ஒரு விடயத்தை பதிவிடுதல் பொருத்தமென நினைக்கின்றேன். தமிழகத்தில் இருந்து மக்கள் குடிபெயர்ந்தபோது தனி நபர்களாக படகுகளிலோ அல்லது கப்பல்களிலோ ஏறி இலங்கைக்கு வரவில்லை. கிராமம் கிராமமாகவே கப்பலேறினர்.

அந்த வகையில் மலையகத்தில் இந்த மக்களின் குடியேற்றத்தைப் பார்த்தால் தமிழக கிராமங்களை அப்படியே பெயர்த்து மலையகத்தில் பதித்துவிட்ட அமைப்பைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கிராமக் குடிப் பெயர்வு தமிழக கிராமங்களின் பண்பாட்டு பாரம்பரியங்களை அப்படியே மலையகத்தில் புதிய சூழலுக்குள்ளும் தமக்கிடையிலான உறவுகளின் மூலமும் காப்பாற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மலையக மக்களின் படைப்புக்களை நோக்குகின்ற போது இலக்கியப் படைப்புக்கள் அம் மக்கள் வாழத் தலைப்பட்ட சூழலில் பிறந்தவைகளாக இருந்த போதும் அதன் வேர்கள் தமிழக கிராமங்களில் இருந்து ஊற்றெடுக்கின்றன என்பதை அவதானிக்கலாம்.



ஏனெனில் தமிழகத்தில் இருந்து இலங்கை நோக்கி குடிபெயர்ந்த போது தாம் பிறந்த மண்ணின் கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களையும் தம்முடன் அணைத்து இணைத்து எடுத்து வந்துள்ளனர். எனதோன் மலையக மக்களின் ஆரம்பகால கலை இலக்கிய வெளிப்பாடுகளாக கதைப் பாடல்கள் - நாட்டார் கதைகள் - நாட்டார் பாடல்கள் வடிவில் காணப்படுகின்றன.

“திண்ணை இலக்கிய மரபு”

இந்த இலக்கிய பாரம்பரியம் மலையகத்தின்புதிய சூழலுக்குள் பிரவாகித்த போது தமது பாரம்பரிய இலக்கிய இதிகாசங்களையும் காப்பாற்றிக் கொண்டனர்.

குறிப்பாக “இராமாயணம்” “மகாபாரதம்” போன்ற இதிகாசங்ளும் “ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி” - “இராஜாதேசிங்கு” - “அல்லி அரசாணி மாலை” - “நளமகாராஜன்” - “அரிச்சந்திரன் வனவாசம்” - “மதுரைவீரன” - “கட்டபொம்மன்” - “நல்லதங்காள” - “விக்கிரமாதித்தன” முதலிய கதைகளும் “மதுரைவீரன” - “அரிச்சுனன் தவசு” - “பொன்னர் சங்கர” - “காமன் கூத்து” முதலிய கூத்துகளும் அவை சார்ந்த பாடல்களும் இவை தவிர்ந்த “தாலாட்டு” - “ஒப்பாரி” - “மாரியம்மன்” ”தாலாட்டு” போன்றவையும் அமைந்து காணப்படுகின்றன. உண்மையில் இந்தப் பாரம்பரிய இலக்கியங்கள் திண்ணை இலக்கியங்களாக பேணப்பட்டன என்று கூறுவதே பொருந்தும்.

மலையகத் தோட்டப் பகுதிகளில் மேற் கூறிய இதிகாசங்களும் கதைகளும் 1983 வரை திண்ணை இலக்கியங்களாக தொடர்ந்தன.

உண்மையில் இந்த இதிகாசங்களையும் கதைகளையும் சிறு வயதிலேயே தோட்ட லயத்து திண்ணைப் பாரம்பரியத்துக் கூடாகவே நான் கற்றுக் கொண்டேன் என்பதை இங்கு பதிவிட விரும்புகின்றேன்.

அதேபோல் சிறுவர்களை அமர்த்தி கதை கூறுதல் என்பது தோட்டங்களில் வழமையான நிகழ்வுகளாகும். இந்த நிகழ்வுகள் பெரும்பாலும் நிலாக் காலங்களில் நடைபெறும். தோட்டத்து லயன் வாசல்களில் தாய்மாாகள் ஒன்று கூடி தமது பிள்ளைகளுக்குக் கதை கூறுவார்கள்.

தமிழக யாத்திரிகர்கள் வருகை.

ஆரம்ப காலங்களில் மலையகத்தில் வசதி படைத்தவர்களின் வீடுகளுக்கு (பெரிய கங்காணி செல்வந்தர்கள்) தமிழகத்திலிருந்து சில யாத்திரிகர்கள் கவிஞர்கள் புலவர்கள் வந்துபாடி பரிசு பெற்றும் சென்றுள்ளனர்.

இவை குறித்து காலஞ்சென்ற கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஷஷி இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்ட துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள். பாரதம் இராமாயணம் பாடும் புலவர்கள் திருப்புகழ் கவிராயர் காவடிச் சிந்துப்பாடகர்கள் தியாகராஜர் கீர்த்தனங்களை இசைக்கும் சங்கீத வித்துவான்கள் ஆகியோர் தமது யாத்திரைக் காலங்களில் பெரிய வீடுகளுக்குச் சென்று பாடி சன்மானம் பெற்றுப் போவதுண்டு. இவர்கள் வருகை இலக்கிய உணர்வை வளர்த்தது. அந்த காலத்தில் சினிமா இல்லை. மலைநாட்டில் சில முக்கிய பட்டினங்களில் நாடகங்கள் நடந்தன. “லங்கா தகனம்” “இராமாயணம்” “சத்தியவான் சாவித்திரி” ஆகிய நாடகங்கள் பிரசித்தி பெற்றவை.

இவ்வாறான சூழலில் மக்கள் குழுமியிருந்து அப்பாடல்களை இரசிப்பது இயல்பான ஒன்றாகும். இதன் காரணமாக தென்னிந்தியத் தமிழ் கிராம பின்னணியை சார்ந்த நாட்டார் கதைப்பாடல்களின் தாக்கம் தொடர்ந்தும் இடம் பெற்றன. இவை தவிர இம்மக்களின் மத வழிபாட்டு நிகழ்வுகளின் போதும் ஏனைய சமுதாயம் சார்ந்த சடங்குகளின் போதும் இப்பாடல்கள் பாடப்பெற்றன.

மலையக நாட்டார் பாடல்கள்.

மலையகத்தில் கிராமியப் பாடல்கள் மக்களின் மிகக் கடினமான உழைப்பு மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்கு ஒடுக்கு முறைகள் மற்றும் அர்த்தம் எதுவும் இல்லாத வகையில் மேலிருந்தோர் ஈவிரக்கமற்ற முறையில் மக்களை நடத்திய விதம் போன்றவற்றை கருப் பொருளாகக் கொண்டிருந்தன.

மலையக நாட்டார் பாடல்களின் தாயகமாக தென்னிந்தியா இருந்த போதிலும் அவை மலையக சூழ்நிலைக்கேற்றவகையில் புதிய வடிவம் பெற்று விளங்குவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக பின்வரும் பாடல்களை ஒப்பு நோக்கலாம்.

“ஏத்தமடி தேவிகுளம்
எறக்கமடி மூணாறு
தூரமடி நைனக்காடு
தொடந்துவாடி நடந்து போவோம்..”

இப்பாடலில் இடம்பெறுகின்ற தேவிகுளம் மூணாறு நைனக்காடு ஆகியன தென்னிந்தியாவில் காணப்பட்ட ஊர் பெயர்களாகும். இப்பாடல் மலையக சூழலில் இவ்வாறு பரிமாணம் அடைந்து காணப்படுகின்றது.

“ஏத்தமடி பெத்துராசி
ஏறக்கமடி ராசாத்தோட்டம்
தூரமடி தொப்பித் தோட்டம்
தொடந்து வாடி நடந்து போவோம்”

- இப்பாடலில் இடம்பெறுகின்ற பெத்துராசி ராசாத் தோட்டம் தொப்பித் தோட்டம் முதலிய சொற்கள் ஊர் பெயர்களாகும். அவ்வகையில் நோக்குகின்ற போது மலையக நாட்டார் பாடல்களில் தென்னிந்தியாவின் செல்வாக்கு காணப்படுகின்ற அதேசமயம் அவை மலையக சூழலுக்குக்கேற்ப புதிய வடிவம் பெற்றிருப்பதனையும் காண முடிகின்றது.

- வறுமை வரட்சி சுரண்டல் சாதி அடிப்படையிலான அடக்கு முறைகள் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு வரும் போது அவர்களின் உணர்வுகள் இவ்வாறாக வெளிப்படுகின்றது.

“வாடை யடிக்குதடி
வடகாத்து வீசுதடி
செந்நெல் மணக்குதடி
சேர்ந்துவந்த கப்பலிலே”

- புகுந்த மண்ணில் ஏற்பட்ட ஏமாற்றம் சுரண்டல் அடக்கு முறைகள் என்பவற்றின் காரணமாக அவர்களின் வஞ்சிக்கப்பட்ட வாழ்க்கை ஏற்படுத்திய அனுபவம் காரணமாக தமது தாயகம் பற்றிய ஏக்க உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொள்கின்றது:

“ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்
போரான கண்டியே
பெத்த தாயே நா மறந்தேன்”

--------

“பாதையில வீடிருக்க
பழனி சம்பா சோறிருக்க
எருமை தயிரிருக்க
ஏண்டி வந்தோம் கண்டி சீமை”

-----------

“கூனியடிச்சமலை
கோப்பி கண்டு போட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அந்தா தெரியுதடி”.

என்ற இப் பாடல் வரிகளை விபரிக்கும் போது மலையக பெரும் கவி சி.வி. வேலுப்பிள்ளை ஷஷகாடுகளை அழித்துப் புதிய மலைகளை உருவாக்கும் போது சாவு என்பது சர்வ சகஜமானது. மலையகத்தின் ஒவ்வொரு மலைகளும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத்தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனைத் தோத்த மலைகளாகதானிருக்கும்.

மலையகத்தின் மலைகளின் மீது உங்களுக்கு ஏறிடச் சந்தர்ப்பம் வாய்த்தால் உங்கள் காலடிகளைக் கவனமாய் எடுத்து வையுங்கள். ஏனெனில் அவை அண்ணனைத் தோத்த மலைகள்’’. எனக் கூறுவது மலையக மக்களின் வாழ்நிலைகளை சிறப்பாகவே உணர்த்தி நிற்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.



தோட்டங்களில் முறையான மயானங்கள் இன்றும் இல்லை.

அதே வேளையில் இன்றும் மலையகத்தில் பெரும்பாலான தோட்டங்களில் நிலையான முறையான மயானங்கள் இல்லை என்ற உண்மை வெளியில் கூறப்படுவதில்லை. இன்று மயானமாக இருப்பவை காலப்போக்கில் தேயிலை மலைகளாக மாற்றப்படுகின்றன.

அதேவேளையில் பல தோட்டங்களில் தேயிலை மலைகளிலேயே இன்றும் தோட்டங்களில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயானங்காளக விரிந்து கிடக்கின்றன.

எனவே “அண்ணனைத் தோத்த” மலையாக மலையக தோட்டங்களின் பெரும்பாலான பகுதிகள் இன்றும் உள்ளன.

மலையக மக்களின் வரலாறு 200 வருடத்தை எட்டிய போதும் இன்றும் அந்த மக்கள் கூட்டத்தின் பெரும் பகுதியினர் இறந்தவர்களை மரியாதையாக அடக்கம் செய்ய நிலம் இல்லை. அதாவது அந்த மக்கள் இருக்கும் போதும் சொந்தமாக வாழ சொந்த நிலம் இல்லை. அதே மண்ணில் வீழ்ந்த பின்னும் அதே நிலைதான் உள்ளது.

அந்தவகையில் “மலையகத்தின் ஒவ்வொரு மலைகளும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத்தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனை அல்லது தந்தையை அல்லது தாயை அல்லது உறவுகளை “தோத்த” மலைகளாகத்தான் இருக்கும் என்ற சி.வி. வேலுப்பிள்ளையின் வரிகள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதுகுறித்து சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகள் நிறையவே பேசியுள்ளன.

அவருடைய இரண்டு கவிதைகளை உங்கள் முன் வைக்கின்றேன்.

**(தொடரும்...)**

# கனடாவில் செல்வி அதிசாவின் சலங்கைப்பூசை

**- குரு அரவிந்தன்**

செல்வி அதிசாவின் சலங்கைப்பூசை சித்திரை மாதம் 6ம் திகதி சனிக்கிழமை கனடா, மார்க்கத்தில் அமைந்துள்ள கலைக்கோவில் மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. சலங்கைப்பூசை என்று சொல்வதைவிட, எமது இளைய தலைமுறையினருக்கு எமது பாரம்பரிய கலைகளை அறிமுகம் செய்யும் ஒரு நிகழ்வாகவே இது இருந்தது. "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற் கிணங்க அகவை எட்டு நிரம்பிய அதிசா தனது மூன்று வயதில் இருந்து கலைக்கோவில் நடன ஆசிரியை நாட்டியக் கலாநிதி ஸ்ரீமதி வனிதா குகேந்திரனிடம் நடனத்தைச் சாத்திர முறைப்படி கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அதிசா திலீபன் தனது நடனத்தில் ஒவ்வொரு பாடலிலும் இசைக்கேற்ப, தாளம் பாவம் கலந்து தன் உணர்வை வெளிப்படுத்தி, தமிழ் மொழியை நன்கு விளங்கி அதனை உள்வாங்கித் தன் உள்ளுணர்வுடன் நடனம் ஆடி, சபையிலுள்ளவர்களை ஆச்சரியப்பட வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவரது தங்கையான மூன்று வயது நிரம்பிய குழந்தை அய்ரா திலீபன் "சின்னச் சின்ன முருகா! சிங்கார முருகா" என்ற பாடலுக்கு அக்கா அதிசாவுடன் சின்னக்காலால் தாளம் தப்பாமல் பாவத்துடன் பொருளை உணர்ந்து ஆடிய விதம் சபையோர் எல்லோரையும் மெய்மறக்கச் செய்தது,

மிருதங்க வித்வான் குகேந்திரன் அவர்கள் இந்தப் பிள்ளைகளையும், இவர்களின் தாயார் நவகீதா அவர்களையும் வாழ்த்தி "பெற்றவர்கள் மட்டும் பெற்றோர்கள் அல்ல, பிள்ளைகளின் வளர்ச்சியில் பங்கு பெறும் அனைவருமே பெற்றோர்கள்தான்" என்று குறிப்பிட்டார்.

அடுத்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில், "இங்குள்ள பிள்ளைகளை இதுபோன்ற ஏதாவது ஒரு துறையில் ஈடுபட வைப்பதன் மூலம் எதிர்காலத்தில் பிள்ளைகளை ஆரோக்கியமான உடல், உள நலத்துடன் வாழவைப்பது மட்டுமல்ல, எமது மொழியையும், பாரம்பரிய கலைகளையும் இந்த மண்ணில் தொடர்ச்சியாகத் தக்க வைக்க முடியும் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எதற்காகக் கனடிய மண்ணில் கடந்த 30 வருடங்களாக நாங்கள் பாடுபட்டோமோ அது, இதுபோன்ற இளைய தலைமுறையினரால் முன்னெடுக்கப் படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது" என்று குறிப்பிட்டார்.





அடுத்து எழுத்தாளர் இணையத் தலைவர் அகணி சுரேஸ், மார்க்கம் நகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன், மற்றும் அதிசாவின் கல்லூரி ஆசிரியர் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

"சலங்கைப்பூசை என்பது ஒரு ஆரம்பம், இதனைத் தொடர்ச்சியாக இடை நிறுத்தாமல் தொடர்ந்து பயின்று அடுத்த தலைமுறையினர் எமது கலைகளைப் பயில்வதற்கு நீங்கள் இருவரும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்றும், கனடிய மண்ணில் எமது தமிழ் மொழி, பண்பாட்டுடன் புது வரலாறு படைத்து, ஆரோக்கியமாக வாழ வேண்டும்" என்றும் இளம் தலைமுறையினருக்கான கனடாவில் இருந்து வெளிவரும் "வதனம் இதழ்" சார்பாக அதிசா, அய்ரா இருவரையும் அதன் நிர்வாக ஆசிரியரான கமலவதனா சுந்தா வாழ்த்தினார்.

---

## மக்கள் சிந்தனைப் பேரவை

தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில்

WORLD BOOK DAY 23 APRIL 2024

### உலகப் புத்தக நாள் விழா

**பேரவையின் வெள்ளிவிழாச் சிறப்பு நிகழ்ச்சி**

23.04.2024 செவ்வாய்க்கிழமை மாலை 6:30 மணி

பெசண்ட் அரங்கம், தஞ்சாவூர்

வரவேற்புரை : பேராசிரியர் **கோ. விஜயராமலிங்கம்**
மாநிலத் துணைத்தலைவர்,
தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
மக்கள் சிந்தனைப் பேரவை.

தலைமை : திருமிகு **த. ஸ்டாலின் குணசேகரன்**
மாநிலத் தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை.

முன்னிலை : திருமிகு **க. அன்பழகன்**
பொதுக்குழு உறுப்பினர், மக்கள் சிந்தனைப் பேரவை.

சிறப்புரை : 'ஞானாலயா'
திருமிகு **பா.கிருஷ்ணமூர்த்தி**
'ஞானாலயா'
திருமதி **டோரதி கிருஷ்ணமூர்த்தி**

அரசு நூலகத்தைப் பயன்படுத்தியவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் : மருத்துவர் **இராதிகா மைக்கேல்**
பொதுக்குழு உறுப்பினர், மக்கள் சிந்தனைப் பேரவை.

நன்றியுரை : திருமிகு **ஜா. தினகரன்**
மாநிலத் துணைச் செயலாளர், மக்கள் சிந்தனைப் பேரவை.

தாங்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

மக்கள் சிந்தனைப் பேரவை
தமிழ்நாடு மாநிலக் குழு

---

(12 பக்கத் தொடர்ச்சி)

# ரணிலின் முதல் "எதிரி" யார்?

எனினும் 2022 ஜுலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக் காரர்களால் கைப்பற்றப்பட்டது. கோத்தபாய ராஜபக்ஸ தலைமறைவானார். இந்நிலையில் 2022 ஜுலை 13 இல் கோத்தபாய ராஜபக்ஸநாட்டை விட்டு வெளியேறி 14 ஆம் திகதி தனது ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதை அடுத்து, பிரதமராகப் பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜுலை 15 இல் பதில் ஜனாதிபதியானார். 2022 ஜுலை 20 ஆம் திகதி, பாராளுமன்றத்தில் 225 எம்.பி.க்களிடையில் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகள் பெற்று 8 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் பிரதமர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யாமல் ஆறாவது தடவையாக பதவி இழந்தார்.

இதேவேளை ஐக்கியதேசியக்கட்சியின் தலைமைப்பதவியும் எதிர்க் கட்சித்தலைவர் பதவியும் அதன் தலைவரான காமினி திசாநாயக்கா 1994 அக்டோபர் 24இல் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்தன. 1994 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல்வேறு சவால்கள், நெருக்கடிகள், சதிகள், கழுத்தறுப்புக்கள் கட்சி பிளவுகளுக்கு மத்தியிலும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்கின்றார்.


1977 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான தனது 47 வருடகால அரசியல் வாழ்க்கையில் 6 தடவைகள் இலங்கையின் பிரதமராக பதவி வகித்த பெருமையை பெற்ற போதும் அந்த 6 தடவைகளும் பிரதமர் பதவிக்குரிய 5 வருட காலம் முழுவதும் ரணில் விக்கிரமசிங்கவினால் பிரதமர் பதவியில் இருக்க முடியவில்லை. இடை நடுவில் அவர் பிரதமர் பதவியை இழப்பதே துரதிஷ்ட வரலாறாகியுள்ளது.பிரதமர் பதவியைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவை முழுகாலப் பகுதிக்கும் அமர விடாது துரத்தும் துரதிர்ஷ்டமே தொடர்ந்தும் வெற்றி பெற்று வந்துள்ளது.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவை துரத்தி துரத்தி அடித்த துரதிர்ஷ்டம் என்ன நினைத்ததோ தெரியவில்லை அவரே கலைத்துவிட்ட ஜனாதிபதி பதவிக் கனவை நனவாக்கி கொடுத்து தற்போது புது ஆட்டத்தை தொடக்கி வைத்துள்ளது. ஒரு முறையேனும் பிரதமர் பதவியை முழுமையாக பூர்த்தி செய்ய துரதிர்ஷ்டத்துடன் போராடித் தோற்றுப்போன ரணில் விக்கிரமசிங்க தற்போது கிடைத்த தனது ஜனாதிபதி பதவியை பாதுகாக்கவும் மீண்டும் ஜனாதிபதியாகவும் துரதிர்ஷ்டத்துடன் மீண்டும் போராடத் தொடங்கியுள்ளார்.

இந்த ஜனாதிபதி பதவியை இறுதிவரை தொடரக்கூடிய அரசியல் கள நிலையும் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான மக்கள் மன நிலையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக இல்லாத நிலையே உள்ளதால் மீண்டும் ரணில்-துரதிர்ஷ்டத்துக்கிடையிலான போட்டியில் துரதிர்ஷ்டமே வெற்றிபெறக்கூடிய சூழலே பிரகாசமாகவுள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களின் சிந்தனையின் விளைவாக ரொறன்ரொ பெரும்பாகத்தில் இரண்டாவது மருத்துவ வளாகம்



ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களின் சிந்தனையின் விளைவாக ரொறன்ரொ பெரும்பாகத்தில் இரண்டாவது மருத்துவ வளாகம் உருவாகின்றது என்று அறிவித்துள்ளார் எமது ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில்:

"எமது ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது மருத்துவர்களுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பலர் தங்களுக்கான குடும்ப மருத்துவர் ஒருவர் இல்லாததை மிகவும் கவனிப்புடன் நோக்கிய எமது மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் யோர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய மருத்துவப் பள்ளியை உருவாக்க சம்மதம் தெரிவித்து அதனை அங்கீகரித்துள்ளார்.

இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட ஸ்காபுறோ வளாகத்தில் உருவாகும் மருத்துவ பீடம் தற்போது நிர்மானிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மருத்துவக் கல்வி முறையின் மிகப்பெரிய விரிவாக்கத்தைத் தொடங்குவதன் மூலம், சுகாதாரப் பணியாளர்களை வளர்க்க நமது அரசாங்கம் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை எடுத்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நிச்சயமாக, UTSC இல் ஸ்கார்பரோவில் உள்ள முதல் மருத்துவ வளாகமும் இதில் அடங்கும், இது ஏற்கனவே நடந்து வருகிறது.

எங்களின் சமீபத்திய வரவு செலவுத் திட்டத்தில், வோன் நகரில் உள்ள யோர்க் பல்கலைக்கழகத்தின் புதிய மருத்துவப் வளாகத்தின் வடிவமைப்பு மற்றும் திட்டமிடலுக்கு ஆதரவாக எங்கள் அரசாங்கம் $9 மில்லியன் முதலீடு செய்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்" என்று ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் ஒரு தமிழ் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ். றொசேரியன் லெம்பேட் (15-04-2024)

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பை பொறுத்த வகையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் ஒரு தமிழ் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை. எனவே தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 15-04-2024 அன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது யாரை ஆதரிப்பது அல்லது தமிழ் பொது வேட்பாளர் குறித்து இதுவரை எவ்வித கலந்தாலோசனை களையும் முன்னெடுக்கவில்லை.

தமிழ் பொது வேட்பாளர் குறித்து ஊடகங்களில் கருத்தக்கள் வெளி வருகிறது. என்னை பொருத்தமட்டில் அவர்கள் கூறுவதன் பிரதான காரணம் தொடர்ச்சியாக ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தாலும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்கின்ற சிலரது கருத்துக்கள் நிலவுகின்றன.

எனது தனிப்பட்ட கருத்தாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது மிகவும் கடினமான விடையம். வடக்கு கிழக்கு மலையகம், கொழும்பை பொறுத்த வகையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் ஒரு தமிழ் தலைமையை மக்கள் இன்னும் அடையாளம் காணவில்லை.காணவும் முடியாது என்பது என்னுடைய கருத்து.

எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கட்சித் தலைவர் அல்லது பொதுவானவர்களையோ அடையாளம் காண்பது என்பது கடினமான விடையம்.

குறிப்பாக தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்திற்கு மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இருப்பதாக நான் காணவில்லை.தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தல் ஒன்று அறிவிக்கப்படும் போது வேட்பாளர்கள் தேர்தலில் நிறுத்தப்படும் போது அந்த நேரத்தில் கட்சி ஒரு தெளிவான முடிவை எடுக்கும். என தெரிவித்தார்.

மேலும் கச்சை தீவு விவகாரம், இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கைகள் குறித்தும் கருத்து தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# மருத மடு அன்னையின் திருச் சொருபம் தற்போது நெல்லியடி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில்!



மருத மடு அன்னையின் திருச் சொருப பவனி நெல்லியடி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் 16-04-2024 அன்று பிற்பகல் 5:00 மணிக்கு வருகைதந்துள்ளதுடன் அங்கு சிறப்பு வழிபாடுகளும் இடம் பெற்றது.

மறு நாள காலை 18-04-2024 7 மணிவரை சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றதுடன் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் காலை 8:00 மணிமுதல் பிற்பகல் நான்கு மணிவரை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.



மருத மடு மாதாவின் வருகையால் நெல்லியடி நகரமே விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.

யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகைதந்தனர்.நெல்லியடி போலீசார் மற்றும் சிறப்பு அதிரடி படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

# வலிப்பு ஏற்பட்ட நிலையில் கிணற்றில் விழுந்த யாழ்ப்பாண இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு!

வலிப்பு ஏற்பட்ட நிலையில் கிணற்றில் விழுந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது மாதகல் - சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த பிரதீபன் நித்தியா (வயது 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கு வலிப்பு நோய் உள்ளது. இந்நிலையில் பிற்பகல் 6.30 மணியளவில் வீட்டு கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். பின்னர் சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் இன்றையதினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இரண்டு பிள்ளைகளின் தாயான இவர் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.






# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1096



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
### கொக்குவில், யாழ்ப்பாணம்

சமயம் என்பது மக்களைப் பண்படுத்தி நேரியவாழ்வு வாழ வழிகாட்டும் தூய மார்க்கமாகக் கருதப்படுகின்றது. தன்னையும் வாழ்வித்து மற்றவனையும் வாழ வழிகாட்டும் அன்பு நெறியே சமயமென ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் ஒன்று கூடி வாழுகின்ற சமுதாயத்திற்கு உயிர்நாடியாக சமயமே விளங்குகின்றது. இது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது.

சமயத்தின் அடிநாதமாக சமயத்தின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் கருவியாக ஆலயங்கள் விளங்கி, ஆன்மாக்கள் ஈடேற வழி வகுத்துள்ளன. இயற்கை சீற்றமின்றி இயங்கவும், நாட்டிலே வளம் சிறக்கவும், விளைவு பெருகவும், மக்கள் வாழ்வு சிறக்கவும் ஆலய வழிபாடு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. தன்னை நாடிவரும் அடியவர்களின் துயர்போக்கி, அவர்களது தீவினைகளை அகற்றி, நல்வினைப்பயனை அருள்மூலமாக மக்களுக்கு உணர்த்தும் அறநிலையங்களாகவும் இவ் ஆலயங்கள் விளங்குகின்றன.

"முன்னியது முடித்தலின் முருகொத்தீயே" என்பதற்கமைய, முருகப்பெருமான் தமிழர் வாழ்வில் கண்கண்ட தெய்வமாகக் காணப்படுகின்றார். இத்தகைய முருக வழிபாடு, ஈழத்தின் மிகத் தொன்மையான வழிபாடாகக் காணப்படுகின்றது. இலங்கைத்திருநாட்டின் மகுடமெனத்திகழும் யாழ்ப்பாணத்திலே, முருக வழிபாடு தமிழரசர் காலத்தில் இருந்தே சிறப்புற்றுக் காணப்பட்டுள்ளது. அக்கால அரசர்களும் அரண்மனைகளைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தாது, ஆலயங்களைக் கட்டியெழுப்புவதில் ஆர்வங்கொண்டு அதனை நிறைவேற்றியுள்ளார்கள்.

செந்தமிழ்ப் பிரியனான கந்தவேளை எந்தவேளையும் நினைக்க, ஈழமெங்கும் பல முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் கலியுகவரதனாம் கந்தப்பெருமான் அருள்பாலிக்கும் திருத்தலங்களுள், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. பழமையான கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டதாக அமைந்துள்ளது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கொக்குவில் என்னும் இடத்தில், மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மிகப் புராதனமானது. இவ்வாலயம் சைவமணங்கமழும் யாழ்நகரின் வடபால் இரண்டு மைல் தூரத்திலும், கொக்குவில் புகையிரத நிலையத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலும், காங்கேசன்துறை வீதியின் தெற்குப்புறமாகவும் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலே வள்ளி அம்மையார் தெய்வயானை அம்மையார் சமேதர-ராக சுப்ரமணியப்பெருமான் வீற்றிருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார்.

மஞ்சலியாடு, மஞ்சமலியகாடு எனப் பல பெயர்களால் கூறப்பட்டுவந்த இவ்வாலயம், முருகபக்தர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால், மஞ்சவனப்பதி என்ற சிறப்புத்திருநாமம் இடப்பட்டு, அப்பெயரே தற்காலத்தில் நிலைத்துநின்று, அருளும் புகழும் பொலிவுற்றோங்கி வளர்ச்சிபெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது.

கொக்குவில் கிராமத்திலே மஞ்சமருதிகாடு என்ற இடப்பெயருடைய குறிச்சி ஒன்று காணப்பட்டது. இவ்விடம் மேட்டுநிலமாகவும், மருதமரங்கள் வானளாவி நிறைந்த சோலையா-கவும் விளங்கியது. இவ்வழகிய இடத்திலே அம்பலவாண விநாயகமூர்த்தி என்ற பெயரிலே ஆலயமொன்று இருந்துள்ளது. தற்காலத்திலே, பரிவார மூர்த்தியாகிய விநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திலே இருந்த விநாயகரை, இடப்பெயரைக் கருத்தில் கொண்டு மஞ்சமூர்த்தி என அழைத்துள்ளனர்.

தற்போது மஞ்சவனப்பதி முருகனாக கர்ப்பக்கிரகத்தில் வள்ளி தெய்வயானை சமேதர-ராக சுப்ரமணியப் பெருமான் வீற்றிருக்கின்றார் என்பது கர்ணபரம்பரைக் கதையாகக் காணப்படுகின்றது. முருக வழிபாடு புகழும், அருளும் பெற்ற வழிபாடாக மலர்ந்ததன் விளைவாக, ஈழத்தின் பல பாகத்திலே விநாயகர் ஆலயங்கள், மற்றும் சிவாலயங்கள் எனப் பல ஆலயங்கள் பிற்காலத்திலே, முருகன் ஆலயங்களாக மாற்றம் பெற்ற வரலாறு, ஆலய வரலாறுகளில் காணப்படுகின்றது.

கி.பி 115 ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் தோற்றம்பெற்றதென கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது. சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தில் தனது ஆட்சியை நிலைநிறுத்திய காலத்திலே, கொக்குவில் பதிவாழ்மக்கள் மஞ்சமருதிகாடு என்ற இடத்திலே விநாயகப்பெருமானுக்குரிய கோயில் ஒன்றை அமைத்தனர்.

ஆரம்ப காலத்திலே இவ்விநாயகர் ஆலயம், சிறு கொட்டகையுடனான அமைப்பிலேயே மடாலயமாகக் காணப்பட்டுள்ளது. இக்கொட்டகை ஓலையால் வேயப்பட்டு, தரை சாணத்தால் மெழுகப்பட்ட நிலையிலேயே இருந்துள்ளது. ஆரம்பகாலத்திலே ஆகமநெறி சாராத ஆத்மார்த்த பூசையே இக்கோயில் நடைபெற்றுள்ளது. இதற்கமைய அந்தணர் மரபு சாராத சைவ மரபிலே வந்த ஒருவரே, இவ்வாலயத்திலே ஒருவேளை பூசையை நிகழ்த்தி வந்துள்ளார். மடாலயமாக இவ்வாலயம் இருந்த காலத்திலே பாதசி முதலிக்குட்டி சண்முகம் என்பவர், இவ்வாலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்துள்ளார்.

பாதசி முதலிக்குட்டி சண்முகம் அவர்கள் நம்பிக்கைப் பெறுப்பாளராக இருந்த காலத்தில், மடாலயமாக விளங்கிய கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், மிகவும் பிரபல்யம் பெற்ற ஆலயமாக விளங்கியுள்ளது. இக்காலத்தில் இப்பெரியார் பல்வேறு திருப்பணிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்தவராக விளங்கியுள்ளார். இக்காலத்திலிருந்தே சைவசித்தாந்த மரபைப் பேணிய பெருமையுடையதாக இவ்வாலயம் விளங்கியுள்ளது. கொக்குவில் த. குமாரசாமிப்புலவர் அவர்களுடைய முன்னோராகிய சட்டம்பி முருகேசு என்பவர், இவ்வாலயத்திலே புராணபடனம் நடைபெறுவதற்கு ஏடு எழுதிக்கொடுத்துள்ளார்.

*வளரும்...*




OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

## 19-04-2024 வெள்ளி தொடக்கம் 25-04-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** தனவரவுகளை சந்திக்கும் வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மாற்றுத்தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிட்டும். உறவினர் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தொல்லைகள் ஒழியும். பொறாமைகள் விலகும். பொருள் சேர்க்கை உண்டு. மனஅமைதி குறையும். அரசாங்க அனுகூலம் கூடும். எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் பெருகும். தாய் வழி உறவு லாபம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான காலம். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு விலகும். சொல்லில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து வந்து சேரும். விபரீத போக்கு மாறும். உடல்சோர்வு ஏற்படும். பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி அதிர்ஷ்ட எண்: 1,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,C




**ரிஷபம்:** பாதிப்புக்கள் அகலும் வாரம். குடும்ப சந்தோஷம் கூடும். புது முயற்சி பலன் தரும். வேலைபளு அதிகரிக்கும். எண்ணம் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் சிறக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவுகளால் அலைச்சல் உண்டு. மனோபயம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. உடல் அசதி ஏற்படும். சுபச்செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு குறையும். பயணம் அனுகூலம் தரும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வேலைப்பளு குறையும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். வீடு தேடி வெற்றி வரும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். நண்பர்களால் நன்மை உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொல்லைகள் அகலும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சுமூக சூழ்நிலைகள் ஏற்படும். கடவுள் பிரச்சனை கைகொடுக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சிக் கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். சொத்துக்கள் சேரும். அரசியலில் லாபம் உண்டு. உளுந்து தானம் சிறந்த பலன் சேரும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். புதிய முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**கடகம்:** சிந்தனைகள் அதிகரிக்கக் கூடிய வாரம். துன்பங்கள் அகலும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொருளாதார நிலை உயரும். மங்கையருக்கு திருமணம் கைக்கூடும். கல்வியில் அக்கறை தேவை. கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வியாபாரம் வளம் பெருகும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். பூமியால் நன்மை உண்டு. பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களின் உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். புதுமையை விரும்புவீர்கள். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபச்செய்திகள் வரும். காதல் கைக்கூடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். நிம்மதி பெருகும். கடன் சுமை குறையும். கல்வியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,9,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** புதுமைகள் நிகழ்த்தும் வாரம். தாராளமான வருமானம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச்செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். கடன் தொல்லைகளில் இருந்து விடுவு பெறுவீர்கள். கையிருப்பு கரையும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழையக் கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். மனக்கசப்பு ஏற்படும். காதலர்களுக்குள் சண்டைகள் ஏற்படும். அரசியலில் ஆதாயம் உண்டு. தங்க நகைகள் சேரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். செலவுகள் அதிகம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புகழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அரசியலில் ஆதாயம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**கன்னி:** வகையான வாழ்வு அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சூழ்நிலைகள் ஊடுருவும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். மனச்சுமை குறையும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தீரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். வழக்குகளில் வெற்றி தரும். வயிறு உபாதைகளும் உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. குடும்ப பிரச்சனை தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். வழக்குகளில் சாதகமாகும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். இலக்கிய ஆர்வம் கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**துலாம்:** சிந்தனையில் முதிர்ச்சி பெருகும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புகள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பால் தானம் பாவம் போக்கும். தாய், தந்தை உதவி உண்டு. அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். கன்னிப்பெண்கள் கவனம் தேவை. கால்நடைகளால் லாபம் உண்டு. கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தீரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**விருச்சிகம்:** மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமாக சூழ்நிலை அகலும். தொழில்போட்டி அதிகரிக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலம் கவனம் தேவை. பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கருத்து வேறுபாடுகள் தோன்றும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். திக்கற்ற நிலை மாறும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். பயணத்தில் கவனம் தேவை. மாற்று இன நட்பு பெருகும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடி தொழில் முன்னேற்றம் தரும். நலம் காணும் வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை சேரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். இடையூறு அகலும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மேல்மலையனூர் அங்காளம்மன்
அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y

(தொடர்ச்சி 25 பக்கம்)

# கடந்தவையும் கடப்பவையும் – (105)

கனநேரக்காத்திருப்பு என்பதாலோ அன்றுமட்டும் - இரவு
மிகநீளமாய் இருந்தது எங்களுக்கு

அதிகாலையானதும் வேறு வள்ளம் வருமென்றும்
பெரிதாக யோசிக்க ஏதுமிங்கு இல்லையென்றும்

கடலோடி அனுபவம் வாய்ந்தவர்கள் சொல்கிறார்கள் - ஆயினும்
கரையன்றி நடுக்கடலில் நின்றறியா எங்களுக்கு

நடக்குமோ அதுவென்ற ஏக்கம் ஒருபுறமும்
நடுக்கடலில் மாறுவதில் தயக்கம் ஒருபுறமும்

இருக்கவே செய்தது என்றபோதும் சிரித்துக்கொண்டே
வருத்தப்படா மக்கள்போல் நடித்துக்கொண்டோம் - அங்கு

மனவுறுதிகொண்ட பெரியவர்கள் இருந்ததனால்
விடலில்லை அதிகளவில் மனம் சோந்துபோக - ஆனாலும்

அவனும்தான் விடவில்லை தன்தொழிலை - பொழுது
புலரும்முன் விடமாட்டேன்நான் என்பதுபோல்

பேரிரைச்சலுடன் கிளம்பிவிட்டான் விமானக்குண்டுகளை
அதிகாலைக்குள் இறக்கிவிட்டுப் போவதற்கு

தூரத்து இரைச்சல் கிட்டவாய் கேட்கும் போதே - கடைசி
நேரத்து இறைஞ்சுதல்கள் மட்டுமே கேட்குறது காதுகளுள்

காதுகளைப் பொத்திக்கொண்டும் கண்களை மூடுக்கொண்டும்
'பாதுகார் கடவுளே' என்பதுவே பொது வேதமாய் இருந்ததப்போ

வேகமாய் வந்த இரண்டும் தாண்டி தூரமாய் போனபோதே - இனி
சாகவே மாட்டோம் என்பதுபோல் ஓர் உணர்வு - உண்மையில்

கடவுள் என்றொரு காவலன் இருக்கிறான் என்பதை - மிக
அழுத்தமாக உணர்ந்த தருணம் அது

பொழுது புலர திறந்தவெளி நீர்ப்பரப்பில் - தூரத்தே
தெரிகிறது சின்னதாக ஏதோ ஒன்று - அது

மெள்ள மெள்ள முழுமையாக வெளிப்படவே - தனி
வள்ளமல்ல தொடர் வள்ளங்கள் என்பதுவும் புரிந்தது

ஒவ்வொன்றிலும் மக்களும் அவர்தம் பொருள்களும்
எவ்வாறெனினும் மக்களைக் காண்பதில் பெருமகிழச்சி

பெரும் எஞ்சின்கள் பூட்டிய பெரிய வள்ளம் இழுத்துவர
தொடர்ச்சியாக வருகின்றன வள்ளங்கள்

இப்படியும் இழுத்துவர முடியுமா தொடர்ச்சியாக?
எப்பொழுதும் காணாத அதிசயம் அது

ஒன்று இரண்டு என எண்ணுவோர்க்கு முன்னால்
நின்றுகொண்டது இருபத்தோராம் வள்ளம் - ஒருவருடன்.

தொடுத்து வந்த அத்தனையும் காத்துநிற்க - கவனமாய்
எடுத்துவைக்கும் பொருட்கள்போல பக்குவமாம்

இறக்குகிறார் ஒருவர்பின் ஒருவராக எல்லோரையும் - பின்
கனக்கவாய் இருந்த மிதிஉந்துகளும் உடைமைகளும்

இறக்கியபின் பாச்சில் அவர்களில் இருவர்மட்டும்
இறங்காமல் அங்கிருக்க மெதுவாக நகர்ந்தன வள்ளங்கள்

தொடருந்துப் பயணம்போல திறந்தவெளிக் கடலில்
தொடர்ந்த பெரும் பயணமதில் இடையிடையே

திகிலூட்டும் பல பொருட்கள் தண்ணீரில்
தாறுமாறாய் மிதந்துவர பயமடைந்தோம் - அங்கு

தொப்பிகள் செருப்புகள் துணிகள் என
தெப்பமாய் மிதந்து வர - இவை

எப்படி வந்தன என ஆய்வுகளும் அலசல்களும்
கண்டபடி நடந்தபோது கூட வந்தவர் சொல்கிறார்

'நேற்று நடந்த தாக்குதலில் இறந்தவரின் உடைமைகள்' - அதை
கேட்டதுதான் 'பார்க்காதே அங்கே' என

கண்களைப் பொத்துகிறாள் தங்கையவள்
கண்களை மூடியும் திறந்தும் சென்றவாறு

வந்துசேர்ந்தோம் ஒருவாறு அக்கரையாகிய 'நல்லூர்'
கரைக்கு.......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** திட்டமிட்ட செயல் வெற்றி பெறும் வாரம். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். கிருபைகள் சேரும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. குடும்ப பாசம் அதிகரிக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வெளியூர் பயணம் நன்மை தரும். திட்டங்கள் எளிதாகும். இசை ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அழகு நாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T





**மகரம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடல் தொல்லை நீங்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணியக் காரியம் கைக்கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வெளியூர் பயணம் உண்டு. வீண் செலவு ஏற்படும். நெருக்கடிகள் குறையும். விவேகம் வெளிப்படும். வாகனச்செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். விவசாயம் பலன் தரும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். நன்மதிப்புக் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். அணிகலன் சேரும். யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பதற்றம் குறையும். நிதி பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. வெறுப்புக்கள் அகலும். சிறப்புக்கள் சேரும். பயணம் அனுகூலம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கும்பம்:** நல்லோர்களின் நட்பு கிட்டும் வாரம். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனபயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி ஏற்படும். பொறுமையைக் கையாள வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். கல்வியில் ஈடுபாடு குறையும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். தொழில் வளம் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சிறக்கும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**மீனம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். புதிய வேலை முயற்சிகள் பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். யோகமான காலம். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். வியாபாரம் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். போதிய தனவரவு இருக்கும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கை தரம் உயரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணியில் இடமாற்றம் ஏற்படும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். எண்ணம் வண்ணமயமாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். கலக்கமான மனநிலை காணப்படும். கௌரவத்தில் கவனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். நல்லச்செய்திகள் நாடி வரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. செல்வாக்கு உயரும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H

# சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கம் செம்மணியிலா, தீவகப்பகுதியிலா? மாகாண சபைக் கூட்டத்தில் விவாதம்

**- நடராசா லோகதயாளன்**

சர்வதேச தரத்திலான விளையாட்டரங்கு ஒன்றை நகர அபிவிருத்தி அதிகார சபை செம்மணியில் நிறுவ முயல்கின்றது. ஆனால் இதனை தீவகத்தில் நிறுவி அப்பகுதியினையும் அபிவிருத்தி கண்ட பகுதியாக மாற்ற வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகியோர் தலைமையில் வியாழக்கிழமை 18-04-2024 இடம்பெற்ற சமயமே இவ்வாறு தெரிவித்ரார்.

4 ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுவரும் இந்த விளையாட்டு வளாகத்தை செம்மணியில் முன்னர் உப்பளம் அமைந்த பகுதியில் அமைக்க எடுக்கும் முயற்சியை கைவிட வேண்டும். ஏனெனில் குடாநாட்டிற்கான நண்ணீர்த் திட்டம் இப் பகுதியின் ஊனூடாகவே வரும் சமயம் பாரிய கட்டிடங்கள் வரும்போது அவை தடையாக அமையும்.

மழை காலத்தில் நீர் ஓட்டம் தடைப்பட்டு வயல் நிலங்கள் அழிவடைவதோடு நகரின் மத்திக்கான நுழைவாயிலில் இது பொருத்தமற்ற திட்டம்.

இதேநேரம் மன்டைதீவில் இலங்கை வானொலிக்கு வழங்கிய 100 ஏக்கரில். இருந்து 30 ஏக்கரை வழங்குவதனால் தீவுப் பகுதிக்கு மைதானம் அமைப்பதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற இது பொருத்தமான திட்டமாக காணப்படுவதனால் அங்கே அமைப்பதனை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் ஏற்றுக்கொள்வதனால் தீவத்தில் இந்த விளையாட்டரங்கை அமைப்பதனையே கண்டிப்பாக பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு மாற்று பரிசீலனையை அதகாரிகள் ஏன் மறுக்கின்றனர் எனப் புரியவில்லை என்றார்.

# 'யாழ்ப்பாணத்திலிருந்து இரகசியமாக சுன்னக்கல் அகழ்ந்து கடத்தப்படுகிறது' சிவஞானம் சிறிதரன் குற்றச்சாட்டு

**- நடராசா லோகதயாளன்**

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போதும் சுன்னக்கல் அகழப்பட்டு இரகசியமான முறையில் திருட்டுத்தனமாக திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படுவதாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகியோர் தலைமையில் 18-04-2024 வியாழனன்று இடம்பெற்ற சமயமே இதனைத் தெரிவித்ரார்.

காங்கேசனதுறையில் இயங்கிய சீமேந்து ஆலைக்காக சுன்னக்கல் அகழ்ந்த பிரதேசங்களான காங்கேசன்துறை, பலாலி தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாரிய இரு குழிகளும் இன்றுவரை மூடமுடியாமல் ஆபத்தான நிலையில் குடிமனைகளின் நடுவே உள்ளது.

இந்த நிலையில் தற்போது புத்தூர், மாதகல் - இளவாளைப் பகுதிகளில் சிலர் இரகசியமான முறைகளில் சுன்னக்கல் அகழப்பட்டு மூடிய பார ஊர்திகளில் எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு மூடிய பார ஊர்திகளில் தினமும் 10 முதல் 15 வரையான பார ஊர்தி கற்கள் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு எந்த திணைக்களமாவது அனுமதி வழங்கியதா எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த புவிச் சரிதவியல்த் திணைக்களத்தைச் சேர்ந்த மயூரன் பதிலளிக்கையில அவ்வாறான எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனப் பதிலளித்தார்.

## வீணாவின் கவிக்கணை

மரங்கள் எல்லாம்
மனிதர்களால்
வெட்டப்பட்டு
சிதைந்து போக,
காற்றின் சாரலும்
வெப்பத்தை கக்கிட,
நோய்களும் வேகமாய்பரவி
உயிர்களை மாய்த்திட,
மனிதர்களே நீங்கள்
இங்கு
அச்சமும் ஆச்சிரியமும் பட
என்ன இருக்கிறது
இந்த வெயிலைக் கண்டு?



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

## NESAN
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages










26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1463 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 19, 2024




## ருவாண்டா(1994)...இலங்கை(2009)...காசா(2024)...

**சிவா பரமேஸ்வரன் — மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்**


**(இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனுக்கான சிறப்புத் தொடர்) பகுதி — 2**

சரித்திரத்தின் வலி போகாது, அதன் வடு மறையாது.
அந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் நான் லண்டனில் எனது வீட்டிற்கு வந்து உறங்கச் செல்ல முயன்றாலும் ஏனோ ஒரு உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது.
முதல் நாள் இரவுப் பணி.
இந்திய நாடாளுமன்ற தேர்தலை ஒட்டி பிபிசி தமிழோசை சிறப்பு ஒலிபரப்புகளை திட்டமிட்டு இரண்டு வாரங்களுக்கு செய்தது. மே 16 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நாள். அன்று நள்ளிரவு அளவில் (இந்திய நேரம்) முடிவுகள் முழுமையாக வெளியாகிவிட்டன. அதையொட்டி 17.5.2009 லண்டன் நேரம் அதிகாலை 2.30 முதல் 2.45 மணிவரையிலான அந்த ஒலிபரப்பு இந்திய தேர்தலில் வெற்றியை மையப்படுத்தியே இடம்பெற்றது.
(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

## ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் சிந்தனையின் விளைவாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் இரண்டாவது மருத்துவ வளாகம்

ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களின் சிந்தனையின் விளைவாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் இரண்டாவது மருத்துவ வளாகம் உருவாகின்றது என்று அறிவித்துள்ளார் எமது ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள் அவர் விடுத்துள்ள அறிக்கையில்
" எமது ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது மருத்துவர்களுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பலர் தங்களுக்கான குடும்ப மருத்துவர் ஒருவர் இல்லாததை மிகவும் கவனிப்புடன் நோக்கிய எமது மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் யோர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய மருத்துவப் பள்ளியை உருவாக்க சம்மதம் தெரிவித்து அதனை அங்கீகரித்துள்ளார்
இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட ஸ்காபுறோ வளாகத்தில் உருவாகும் மருத்துவ பீடம் தற்போது நிர்மானிக்கப்பட்டு வருகின்றது.
(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)






## ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள அவுஸ்த்திரேலியா எழுத்தாளர் வேலு பாரி எழுதிய "மௌனத்தீவு" நூல் வெளியீட்டு விழா

கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள அவுஸ்த்திரேலியா வாழ் எழுத்தாளர் வேலு பாரி அவர்களின் "மௌனத்தீவு" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு இந்த வெளியீட்டு விழா வெற்றிகரமாக நடைபெற ஆதரவு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். மேலதின விபரங்களுக்கு விளம்பர அறிவித்தலைப் பார்க்கவும்.




## ஸ்காபுறோ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள நூல்களின் சங்கமம்' புத்தகங்களின் கண்காட்சி. கண்டு களிக்க அனைவரும் வாருங்கள்!

கனடாவில் கடந்த 30 வருடங்களாக இயங்கி வரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை 'நூல்களின் சங்கமம்' என்ற புத்தகக் கண்காட்சி ஒன்று 635 மிடில்பீல்ட் வீதியில் உள்ள கனடா இந்து ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. இந்த நிகழ்வில் கட்டணம் எதுவுமின்றி இலவசமாகப் பார்வையாளர்கள் கலந்து கொள்ளமுடியும்.
காலை 10 மணிக்குத் தொடங்கி மலை 5 மணிவரையும் இந்தக் கண்காட்சி நடைபெற இருக்கின்றது. உங்களுக்கு வசதியான நேரம் நீங்கள் வந்து பார்வையிடவோ, நூல்களை வாங்கிச் செல்லவோ முடியும். கனடாவில் உள்ள சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் தங்கள் படைப்புக்களைக் காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் முன்வந்திருக்கிறார்கள். இதுவரை கனடாவில் உள்ள பிரபலமான 32 நூலாசிரியர்கள் தங்கள் நூல்களைக் காட்சிப்படுத்த முன்வந்திருக்கிறார்கள்.

## கனடாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் தமிழ் உரிமைக் குழு Tamil Rights Group அமைப்பின் சமீபத்திய சாதனைகள்

tamil rights group
தமிழ் உரிமைக்கான குழுமம்

தமிழ் உரிமைக குழு **Tamil Rights Group** தனது சமீபத்திய சாதனைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நுணுக்கமான மூலோபாய வாதங்கள் மற்றும் சட்ட முன்முயற்சிகள் மூலம், ஈழத் தமிழர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கும் தனது பணியை நிறைவேற்றுவதில்தமிழ் உரிமைக் குழு **TRG** குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளது.
2021 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ் உரிமைக் குழுவானது, செயல்பாட்டின் பரப்பிற்குள் ஒரு முக்கியமான விடயங்களில் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும் விரைவாக மாறியுள்ளது.
(உள்ளே செய்தி 6ம் பக்கத்தில்)